பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 15 வெள்ளிக்கிழமை (01-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:311

### சர்வதேச சமூகத்தின் சந்தேகம் முற்றுகிறது:

# சமாதான முயற்சியில் இழுத்தடிப்பு நாடகம்!

## அதில் ஜனாதிபதி இரட்டை வேடம்!!

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வி(மரி)சனம்

கொழும்பு,ஒக்ரோபர்1

"இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் சமாதான முயற்சிகளை இழுத்தடிப்பு நாடகமாக்கியிருக்கிறார் ஜனாதிபதி. அதில் அவர் இரட்டை வேடமிட்டு நடிக்கின்றார்.

"ஜனாதிபதியின் இத்தகைய போக்கால் இந்தச் சமாதான முயற்சிகள் மீது புலிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் மட்டுமல்லாமல் முழுச் சர்வதேச சமூகத்துக்குமே சந்தேகம் முற்றிவிட்டது"

இப்படி விசனத்துடன் விமர்சிக்கின்றார் முன்னாள் அமைச்சரும் ஐ.தே.கட்சிப் பேச்சாளரும், எம்.பியுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

"ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பார் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் அல்ல, நாட்டு மக்களும் சர்வதேச சமூகத்தினரும்கூட ஜனாதிபதியின் போக்கின் மீது பலத்த சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

"ஜே.வி.பியினரின் நச்சரிப்பைச் சமாளிக்க முடியாத ஜனாதிபதி, சமாதானப் பேச்சை இழுத்தடிக்கின்றார். அந்த நாடகத்தின் ஓர் அங்கம் தான் தேசிய ஆலோசனைச் சபை. இதுதான்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலம்!

மட்டக்களப்பு,ஒக்.1

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் உள்ள ஐயங்கேணிப் பகுதியில் இளைஞன் ஒருவனின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

19 வயதான தர்மலிங்கம் கோபாலகிருஷ்ணன் என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாத சிலர் அவரை வெளியே அழைத்துச் சென்றுள்ளனர். புலிகள் உறுப்பினர் ஒருவரின் வீட்டைக் காட்டுமாறு கோரியே அவர்கள் இளைஞரை அழைத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)





ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினருக்கு சுவிஸின் ஜெனீவா விமான நிலையத்தில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களினால் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் குழுவினர் விமான நிலையத்தில் இறங்கியதும் அங்கு திரண்டிருந்த ஏராளமான மக்கள் இருபுறமும் தமிழீழத் தேசியக் கொடி ஏந்தியவாறு நின்று பூச்செண்டுகளை வழங்கி வரவேற்றனர். அந்தக் காட்சிகளில் சிலவற்றைப் படங்களில் காணலாம்.

## அமைதிப்பேச்சுக்களில் ஜனாதிபதிக்கு அக்கறையே இல்லை எனக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.1

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதிக்கோ அரசுக்கோ அக்கறையேயில்லை. தமது அரசியல் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில்தான் அரசுத தரப்பினரும் ஜனாதிபதியும் அக்கறைகாட்டுகின்றனர்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

கொழும்பில் அமெரிக்கத் தூதுவரை நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடிய சமயமே கூட்டமைப்பு எம்பிக்கள் இப்படிக் கூறியுள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ஜி.ஜி.கஜேந்திரகுமார், எஸ்.கஜேந்திரன் ஆகியோர் கொண்ட குழு அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்தது.

அப்போது கூட்டமைப்பினர் தெரிவித்ததாவது:

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கின்றார்கள் என்ற தவறான பிரசாரம் ஒன்றை ஜனாதிபதியும் அமைச்சர்கள் சிலரும் மேற்கொண்டு வருகின்றனர். இதில் எந்தவித உண்மையும் இல்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சுகளை மீள ஆரம்பிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மு.காங்கிரஸ் மாநாடு

யாழ்ப்பாணம்,ஒக்.1

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

கட்சியைப் புனரமைக்கும் விதத்தில் மாவட்டங்கள் தோறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்திவரும் மாநாடுகளின் தொடராக எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தளபதி-சிவில் சமூகத்தவர் சந்திப்பு இணக்கமின்றி முடிந்தது

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்ப்பாணத்தில் படை அதிகாரிகளுக்கும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள்குழு பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் இணக்கம் காணப்படாதநிலையில் முடிவடைந்துள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்றுக்காலை 10 மணி முதல் யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

சுமார் 2 மணித்தியாலங்களாக இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது மக்கள் குழுப் பிரதிநிதிகளால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும் அவை எவற்றிற்கும் தீர்க்கமான முடிவுகள் படைத்தரப்பால் வழங்கப்படவில்லை.

அங்கு சிவில்பிரதிநிதிகள் வைத்த முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் அமைந்துள்ள சகல வீடுகளின் உரிமையாளர்களுக்கும் வாடகைப் பணம் செலுத்த வேண்டும்.

★ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 600 மீற்றருக்கு அப்பால் மக்களை மீளக்குடியமர

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை நேற்று வேவு விமானம் நோட்டம்

ஆளில்லாத வேவுவிமானம் ஒன்று நேற்றுக்காலை 7.30 மணிமுதல் 45 நிமிட நேரம் கிளிநொச்சி நகரை வட்டமிட்டு நோட்டமிட்டது. நீண்டகால இடைவெளிக்குப் பின் விமானம் நோட்டமிட்டதை அச்ச உணர்வோடு மக்கள் அவதானித்தனர். (எ-3)

## ஏ-9 வீதிப் போக்குவரத்து நேரத்தை நீடிக்கும் முயற்சி தாமதமாகின்றது

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ். - கண்டி வீதியில் (ஏ-9 பாதையில்) முகமாலை மற்றும் ஓமந்தை ஊடான போக்குவரத்தை இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் [illegible] திட்டம் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அந்தத் திட்டம் இன்னும் சரிவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(முகமாலை மற்றும் ஓமந்தை ஊடான போக்கு

பக்கம் பார்க்க)

## கோதுமை மாவு விலை உயரும்

கோதுமை மாவின் விலையை கிலோ ஒன்றிற்கு 35 சதத்தால் அதிகரிப்பதற்கு பிரிமா நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. இதற்காக முதற்கட்டமாக பிரிமா நிறுவனம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் அனுமதியைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள்களின் விலையுயர்வை

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் [illegible] இன்றைய நாளிதழ்

# ஆணைக்குழு அதிகாரிகள் தாக்கப்பட்டமை மிகவும் மோசமான மனித உரிமை மீறல்!

## வன்மையாகக் கண்டித்து இணையம் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பொலீஸ் நிலையத்தில் வைத்து தாகக்கப்பட்டுள்ளமை மிகவும் மோசமானதொரு மனித உரிமை மீறல் செயற்பாடாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

கடந்த திங்கட்கிழமை யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின், யாழ் அலுவலக அதிகாரிகள் பொலீஸாரால் தாக்கப்பட்டமையைக் கண்டித்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இணையம் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நல்லூரைச் சேர்ந்த திருமதி சந்திரகுமார் ரட்ணசிங்கம் தமது கணவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலீஸ் நிலையத்திற்குச் சென்ற அதிகாரிகளை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியிருப்பதனை யாழ. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சட்டத்தின் பாதுகாவலர்கள் என்ற முறையில் அவர்கள் தரப்பில் இது ஒரு பாரதூரமான குற்றமாகும். நாட்டில் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நடைமுறைகளை முழு உலகமும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும்போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளமை மிகுந்த வேதனையைத்தருகிறது.

மனித உரிமைகளை நிலைநாட்டுவது என்பது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கட்டாயப் பணியாகும். அது மீறப்படும்போது அதனைப் பற்றி விசாரிப்பதற்கும் குற்றம் இழைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

இந்தவகையில், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகராவும் அவரது அதிகாரிகளும் தமது கடமைகளை நியாயபூர்வமாகவும், திறமையாகவும் மேற்கொண்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளதனை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக் காட்ட விரும்புகின்றது.

மிகவும் மதிப்புக்குரிய - பொறுப்பும் மிகுந்த - அதிகாரிகளே தாக்கப்பட்டுள்ளார்கள் என்றால், சாதாரண மக்களின் நிலைமை எவ்வாறு இருக்கும் என்று எண்ணிப் பார்க்க முடியாதுள்ளது.

எனவே, இந்தத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன், இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ப-4-5)



யாழ். மாவட்டப் படைகளின் தளபதி சுனில் தென்னக்கோன் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுப் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட குழுப்பிரதிநிதி சு.பரமநாதன், குழுவின் தலைவர் டி.ஆர்.அருமைநாயகம், படைத்தளபதி தென்னக்கோன், யாழ். ஆயர் அதிவண. தோமஸ் செளந்தரநாயகம் ஆண்டகை ஆகியோரைப் படத்தில் காணலாம். (படம்:வசந்தன்)

# நல்லூர் நூலகம் திறக்கப்படும் நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ். மாநகரசபையின் நல்லூர் பொது நூலகம் திறக்கப்படும் நேரம் மாற்றப்பட்டிருக்கின்றது.

இன்று வெள்ளிக்கிழமைமுதல் நூலகம் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை நாளும் இந்த நூலகம் காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரை திறக்கப்பட்டுவந்தது. (ஐ)

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

கல்வியங்காடு, செங்குந்தா இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்துகொள்வார். சிறப்புவிருந்தினர்களாக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன், பாடசாலை பழைய மாணவர் இரவீந்திரநாதன், யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (4-Ī80)

# கசிப்பு வைத்திருந்த ஐவருக்கு ரூ.ஒரு லட்சத்து 28 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட ஐவருக்கு யாழ். நீதிமன்றம் மொத்தம் ஒரு லட்சத்து 28 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 5 பேரைக் கைதுசெய்த யாழ் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களை யாழ். நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர்.

இவர்களில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்களான வசந்தகுமார் பவளராணி, வசீலன் ஜெயவித்திரா ஆகிய இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஞானேந்திரன் அந்தோனியம்மா என்பவரை 15 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும், 3 ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறும் -

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சோமசுந்தரம் ஆனந்தராசா இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த சிவகுமார் மதினி ஆகிய இருவரையும் தலா 30 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 10 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-5)

# நடைபாதைக் கடைகள் நகரில் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ். நகரப் பகுதி நடைபாதை வியாபாரக் கடைகள் பொலீஸாரின் உதவியுடன் யாழ். மாநகரசபையினரால் அகற்றப்பட்டன.

நேற்றுக் காலை யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி குணராசாவின் நேரடி மேற்பார்வையில் இக்கடைகளை யாழ். போக்குவரத்துப் பொலீஸாரின் உதவியுடன் யாழ். மாநகரசபை ஊழியர்கள் அகற்றினர்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக, பஸ்நிலையப் பகுதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, கே.கே.எஸ்வீதி ஆகிய பகுதிகளில் இருநத கடைகளே அகற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, சட்டத்துக்கு முரணான வகையில் அமைக்கப்பட்டிருந்த தட்டிக்கடைகளும் அகற்றப்பட்டுள்ளன.

மேற்படி நடைபாதைக் கடைகளில் இருந்த றாக்கைகள் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டன. (4-7)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கல்வி வலயம்முன் போராட்டம்




(படம் : பிரபா)

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடக்கு - கிழக்கில் உள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்றுக்காலை 11 மணியளவில் யாழ். கல்வி வலய நுழைவாயிலை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்வி வலயத்திலிருந்து வெளியே செல்லவும் உள்ளேவரவும் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இதனால், தமது தேவைகளுக்காகக் கல்வி வலயத்துக்கு வந்தவர்கள் பல மணிநேரம் காத்து நின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பகுதிநேர ஆசிரியர்கள் நேற்றுக்காலை 8.30 மணியளவில் யாழ். செயலகம் முன்பாகக் கவனஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்திய பின்னர் காலை 11 மணியளவில் யாழ். கல்வி வலயம் முன்பாக முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

இவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்ததால் யாழ். கல்வி வலயத்துக்கு வந்தவர்கள் வலயத்துக்கு அருகிலுள்ள நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் வாசல் வழியாக வெளியேற முற்பட்டனர்.

அதனையும் வழிமறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டதால் எவரும் வெளியே செல்ல முடியாமற்போனது.

யாழ. கல்வி வலயப் பணிப்பாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சங்கத் தலைவர் உட்பட பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

இதனையடுத்து சங்கத் தலைவர் எஸ்.ஞானகரன், யாழ. வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுலோக அட்டைகள் பலவற்றைத் தாங்கிநின்றனர்.

நேற்றுமுன்தினம் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் பத்துப் பேர் உட்பட வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் யாழ். செயலகத்துக்கு முன்பாகக் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தமக்கு உரிய பதில் கிடைக்கும் வரை இவ்வாறான போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபடப் போவதாக அவர்கள் தெரிவித்தனர். (4-7)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஒக்.1

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சுந்தரசிவம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இன்றைய இறுதி ஆட்டங்களில் 14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான போட்டிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மோதவுள்ளன. (3-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஒக்.1

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ 14 வயதுப் பிரிவு - அரையிறுதி ஆட்டம் - திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் அரியாலை கனகரததினம் மத்திய மகாவித்தியாலயம்.

★ 16 வயதுப் பிரிவு - அரியாலை கனகரததினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

★ அரியாலை சிறி பார்வதி வித்தியாலயம் எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவிததியாலயம்.

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம். (3-86)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று கொடிகாமம் அரசினர் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் கலந்துகொள்வார்.

பங்குபற்றும் பாடசாலைகளின் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 12 வயதுப் பிரிவு - சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் மீசாலை வீரசிங்கம் ம.வி.

★ 14 வயதுப் பிரிவு - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி எதிர் வரணி ம.வி.

★ 16 வயதுப் பிரிவு - நாவற்குழி ம.வி. எதிர் மீசாலை வீரசிங்கம் ம.வி.

★ 18 வயதுப் பிரிவு - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# நல்லூரில் இன்று சிறுவர் தினப் பேரணி

சர்வதேச சிறுவர் தினமான இன்று சிறுவர்களின் உரிமைகளை வலியுறுத்தி நல்லூரில் பேரணி ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன. இன்று காலை 9 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் பேரணி நகர்ந்து வந்து நல்லை ஆதீன திருஞான சம்பந்தர் மண்டபத்தை வந்தடையும்.

அங்கு சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டினர் கட்டாயக் கைரேகைப் பதிவு அமெரிக்காவில் நேற்றுமுதல் அமுல்!

ஹுஸ்டன்,ஒக்.1

அமெரிக்காவிற்கு வருகைதரும் வெளிநாட்டவர்கள் தங்களது கட்டைவிரல் ரேகையைப் பதிவுசெய்யவேண்டும். புகைப்படமும் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு வந்துளளது.

அமெரிக்காவில் 15 விமான நிலையங்களிலும், 14 துறைமுகங்களிலும் இது நேற்றுமுதல அமுலுக்கு வந்துள்ளது.

கனடா, மெக்சிக்கோ குடிமக்களுக்கு இந்த நடைமுறையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால், பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்ட கனடா பிரஜை வந்தால் அவரும் கட்டைவிரல் ரேகையைப் பதிவுசெய்யவேண்டும்.

கடவுச்சீட்டு மோசடி மற்றும் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்தக் கைரேகை முறை அமுலுக்கு வருவதாக அமெரிக்க மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெளிநாட்டினர் அமெரிக்காவில் விமான நிலையம் அல்லது துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தபின் குடியேற்றத்துறை அலுவலகத்துக்கு வரவேண்டும். அங்கு வரிசையாக நின்று ஒருவர் பின் ஒருவராக ஒரு கருவிமீது கட்டை விரலைப் பதியவைக்கவேண்டும்.

கட்டைவிரலை வைத்தும் அதிலுள்ள ரேகைகள் கணனியில் பதிவாகும். பின்னர், கடவுச்சீட்டு விவரங்களுடன் அது சேர்க்கப்படும். இந்தப் பணி நடந்துகொண்டிருக்கும்போதே, புகைப்படமும் எடுக்கப்பட்டுவிடும். மொத்தம் 14 விநாடிகளில் இப்பணி முடிந்துவிடும் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

## 43 கோடி டொலர்கள் ஈராக்கிற்கு நிதியுதவி!

நியூயோர்க்,ஒக்.1

சர்வதேச நாணய நிதியம் அவசர உதவியாக ஈராக்குக்கு 43 கோடி டொலருக்கும் அதிகமான தொகையை வழங்க முன்வந்துள்ளது.

சர்வதேச நன்கொடை அமைப்பொன்று ஈராக்கிற்கு இத்தகைய கடன் உதவியைப் பெற்றுக்கொடுப்பது இதுவே முதல்தடவையாகும்.

பல தசாப்தகால சர்வாதிகார ஆட்சி மற்றும் அமெரிக்கா தலைமையிலான யுத்தம் என்பவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் ஈராக்கில் பொருளாதார மீள்கட்டமைப்புப் பணிகளுக்கு உதவுவதற்கே இக்கடன் உதவி வழங்கப்படுகிறது.

ஈராக் தான் கடன்பட்டிருக்கும் தொகையில் பெருமளவு நிதியை நாணய நிதியத்திற்குத்திருப்பிச் செலுத்தியது குறிப்பிடத்தக்கது. (க-8)

## உலகப் பொருளாதாரம் இவ்வாண்டில் பெரும் வளர்ச்சி

இந்த ஆண்டின் உலகப் பொருளாதார வளர்ச்சியானது கடந்து 30 ஆண்டுகளில் அடைந்த மிக வலுவான வளர்ச்சியாகும் என சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது.

வளர்ச்சி விகிதம் 5 சதவீதமென அது கூறுகிறது. அடுத்துவரும் ஆண்டுகளில் இந்த விகிதம் இயல்பாகக் குறையும் என்றும் அது தெரிவித்துள்ளது.

தொழில்மயமான நாடுகளில் வளர்ச்சி விகிதம் நல்ல அளவில் இருந்ததென்றும் சில வளர்முக நாடுகளில் அதிலும் குறிப்பாக சீனாவில் மிகமோசமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதென்றும் சர்வதே நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

சீனாவின் வளர்ச்சி விகித வேகம் குறையத் தொடங்கியுள்ளதன் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

சீனா அளவுக்கதிகமான வேகத்துடன் வளர்கிறது என்ற அறிகுறிகள் தோன்றிய வேளையில் இந்த மாற்றம் வரவேற்கத்தக்கதென்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக மசகு எண்ணெயின் விலையேற்றம் உலக பொருளாதார வளர்ச்சியை பலவீனமடையச் செய்துள்ளது.

எண்ணெய்த் தொழில்துறையில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்கின்ற அபாய நிலை தோன்றியிருப்பதாக நாணய நிதியம் மேலும் தெரிவித்தது. (க-8)

# தனது மக்களிடம் மன்னிப்புக் கேட்கிறார் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர்!

## ஈராக் தொடர்பான தகவல் தவறாம்

லண்டன்,ஒக்.1

ஈராக் போரை நியாயப்படுத்துவதற்காக சதாம் ஹுசைன் பேரழிவு ஆயுதங்களைப் பதுக்கிவைத்திருப்பதாகத் தவறான தகவல் தந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன் என்று பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயர் கூறியுள்ளார்.

பிரிட்டனில் ஆளும் கட்சியாக இருக்கும் தொழிற்கட்சியின் வருடாந்த கூட்டம் பிரைட்டன் நகரில் நடந்தது.

அதில் கலந்துகொள்ள அங்கு வந்த பிரதமர் ரொனி பிளயர் அளித்த ஒரு பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் மேலும் அவர் தெரிவிக்கையில்:-

தடைசெய்யப்பட்ட ஆயுதங்களையும் பேரழிவு ஆயுதங்களையும் சதாம் ஹுசைன் குவிதது வைத்திருப்பதாக எங்களுக்குக் கிடைத்த உளவுத்துறைத் தகவல் தவறானது.

இப்படித் தவறான தகவலைத் தந்ததற்காக எனது மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

ஈராக் மீது போர் தொடுத்து சதாம் ஹுசைன் ஆட்சியைக் கவிழ்த்ததற்காக வருத்தம் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

இந்தப் பிரச்சினையில் தான் ஏன் இவ்வளவு உறுதியான நிலை எடுத்தார் என்பதற்கான காரணம் மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

நம் நாட்டின் பாதுகாப்புக்கு சதாம் ஹுசைன் ஆட்சியிலிருந்து அகற்றப்படவேண்டியது அவசியம் என்றும் அவர் சொன்னார்.

எதிர்வரும் தேர்தலில் பிளயர் 3 ஆவது முறையாகப் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுகிறார். இந்தத் தேர்தலில் ஈராக் போர் தனது வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்று நம்பவில்லை.

தேர்தலில் மக்கள் முடிவைத் தீர்மானிக்கும் பிரச்சினையாக ஈராக் போர் இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதாரப் பலம், எத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்தது, சுகாதாரம் மற்றும் கல்விக்காகச் செலவிடப்பட்ட நிதி போன்ற பிரச்சினைகள்தான் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கக் கூடியவை என்று நம்புகிறேன் என்றும் ரொனி பிளயர் கூறினார். (க-8)

# பயங்கரவாத நிலைப்பாட்டிலிருந்து ரஷ்யா தனது நிலையை மாற்றியது

பயங்கரவாத சந்தேக நபர்களைத் தடைசெய்யும் உலகளாவியத் தடைகளை உருவாக்குமாறு கோரிக்கை விடுத்த ரஷ்யா, தம நிலைப்பாட்டைத் தளர்த்தியிருக்கிறது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பல அங்கத்துவ நாடுகள் ரஷ்யா சமர்ப்பித்த நகல் தீர்மானத்தை ஆட்சேபித்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

அரசியல் அகதிகள் என்ற அந்தஸ்தைப் பயன்படுத்தி பயங்கரவாதச் செயல்களை ஏற்பாடு செய்ய நிதி சேகரிக்கின்ற நபர்களைத் துரிதமாக நாடு கடத்தக்கூடிய நடைமுறையை ரஷ்யா பிரேரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன் போன்ற நாடுகள் எதிர்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்தே, திருத்தப்பட்ட புதிய நகல் தீர்மானம் வரையப்பட்டுள்ளது. (க-8)

# அல்கெய்டா தீவிரவாதிகளுக்கு யேமனில் மரண தண்டனை!

யேமன்,ஒக்.1

அமெரிக்காவுக்குச் சொந்தமான கப்பல் ஒன்றைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவருக்கு யேமன் மரணதண்டனை விதித்துள்ளது.

தண்டனை வழங்கப்பட்ட இருவரும் அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் ஒஸாமா பின்லேடனின் நெருங்கிய சகாக்கள் என அமெரிக்கா குற்றம் சாட்டுகின்றது.

தண்டனை வழங்கப்பட்டவர்களில் ஒருவரான அப்துல் ரஹீம், அல் - நஷீரி நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கவில்லை. அவர் அமெரிக்க இராணுவக் காவலில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதே சமுகமளிககாமைக்குக் காரணம் என்று நீதிமன்றில கூறப்பட்டது.

அல்-நஷீரி சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்.

கப்பல் தாக்கப்பட்டமைக்கு அல்கெய்டா அமைப்பு உரிமை கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. தண்டனை விதிக்கப்பட்ட மற்றவர் ஜமால் அல்-பாதவி எனும் யேமனியராவார்.

இவர்கள் இருவரும் ஏடன் எனும் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த யூஎஸ்எஸ்கோல் என்ற கப்பலை வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட சிறு படகொன்றின மூலம் மோதி நடத்திய தற்கொலைத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள். இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (க-8)



கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகரில் நேற்றுமுன்தினம் முடிவடைந்த பாரலாம்பிக் போட்டிகளின் நிறைவுவிழாவில் நடைபெற்ற சீன அழகிகளின் நடனக்காட்சி இது.

## பலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேல் துருப்புகள் குவிப்பு

காஸா,ஒக்.1

இஸ்ரேலிய இராணுவம் காஸா நகரில் தனது படையினரை அதிகளவில் குவித்து வருகிறது. இஸ்ரேலிய நகரங்களை பலஸ்தீனத் தீவிரவாதிகள் ரொக்கெட் வீசித் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கையில் இராணுவம் இறங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

10இற்கும் மேற்பட்ட டாங்கிகள், கவசவாகனங்கள் ஆகியன பெய்ட்ஹனூன் நகருக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், அப்பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர். இஸ்ரேலிய இராணுவத்தினரின் பல்வேறு தாக்குதலில் பலர் இறந்துள்ளனர். டசின் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.(க-8)

# சிவகாசி ஜெயலட்சுமியை விசாரணை செய்யும் தமிழக நீதிபதிகளுக்குக் கொலை மிரட்டல்!

சென்னை,ஒக்.1

தமிழகத்தின் பாலியல் குற்றச்சாட்டில் சிவகாசி ஜெயலட்சுமியை விசாரணை செய்துவரும் நீதிபதிகளுக்குக் கொலை மிரட்டல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து உடனடியாக தீவிர விசாரணைகளை நடத்துமாறு சென்னை பொலஸ் ஆணையாளருக்கு உயர் நதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிவகாசி ஜெயலட்சுமி பல பொலீஸ் அதிகாரிகள் மீது பாலியல் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார். இந்தப் பரபரப்பான வழக்கை புலனாய்வுத்துறையினர் (சி.பி.ஐ.) விசாரணை செய்யவேண்டும் என மதுரை உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டது.

சி.பி.ஐ. விசாரணை செய்யப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை வாபஸ் பெறவேண்டும் என பொலீஸ ஆணையாளர் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனுவை சென்னை உயர் நீதிமன்றில் நீதிபதிகள் என்.வி.பாலசுப்பிரமணியம் , டி.வி.மாசிலாமணி ஆகியோர் விசாரித்தனர்.

இந்த மனுவை விசாரணை செய்வதற்கு முன்பு கடந்தவாரம் உயர் நீதிமன்றத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக எச்சரிக்கை கடிதம் ஒன்று வந்தது.

இதைத் தொடர்ந்து உயர் நீதிமன்றத்தில் வெடிகுண்டு எதுவும் கண்டெடுக்கப்படவில்லை.

செவ்வாய்க்கிழமை மீண்டும் இந்த மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் பொலீஸார் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்யக்கூடாது என்றும் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டதை மாற்றக்கூடாது என்றும் கூறி எச்சரிக்கைக் கடிதம் ஒன்று உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் பெயர், முகவரி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இந்தக் கடிதத்தின் உத்தரவை மீறி விசாரணை நடத்தினால் கூண்டோடு ஒழிப்போம்; வெடி குண்டு வைத்து தகர்ப்போம் என்று நதிபதிகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தை அனுப்பியவர் யார் என்பதைக் கண்டறிய சென்னை உயர் நீதிமன்றம கடிதத்தை பொலீஸ் ஆணையகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

விசாரணைகளைப் பொலீஸார் தொடர்ந்தும் தீவிரமாக நடத்தி வருகின்றனர். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொதேன் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

அமரர் பரராஜசிங்கம் ஞாபகார்த்த

மென்பந்து துடுப்பாட்ட



## சுற்றுப் போட்டி – 2004

மட்டுப்படுத்தப்பட்ட 12 ஓவர்கள்
7 பேர்வரை உள்ளடக்கியது.

விண்ணப்ப முடிவு திகதி :-
06.10.2004

அணி ஒழுங்குத் தெரிவு :-
07.10.2004

விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடம்:
**RAJH COMMUNICATION**
**Adiyapatham Road, Kalviankadu, Nallur.**
T.P.: 021 – 222 5606

நல்லூர். - நொதேன் வி.கழகம்.

(37065)(43-11-18-21)


## பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் மு.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனும் சிறப்புவிருந்தினராக சங்கானை கல்விக்கோட்டப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரமும் கலந்துகொள்வர்.

(3-203)


## கார் விற்பனைக்கு

சொந்த வீட்டுப்பாவனையிலிருந்த, நல்ல நிலையில் உள்ள மொறிஸ் ஒக்ஸ்போட் (Morix Oxford) கார் உடன் விற்பனைக்குண்டு.

(ஒருகிழமை வரை பார்வையிட முடியும்.)

தொடர்புகளுக்கு:
திரு. V.K. பத்மநாதன் (024-4589384)
திரு. V.K.P.பட்டு (0776 354295)

இல. 09, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(37066)



# சிற்றூழியர் தேவை

எமது நிறுவனத்திற்கு இரவு - பகல் கடமை புரியக் கூடிய ஆண் ஊழியர் தேவை.

இன்று (01.10.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பணிமனைக்கு நேரில் வரவும்.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**உதயன் மனிதவள சேவை,**
**392/6, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(43-21-11-18) (C/37930)


## ஒக்ரோபர் 1

# அனைத்துலக சிறுவர் தினம்!

- பிள்ளைகளைப் பெருமைப்படுத்துவதற்கென பிரேரிக்கப்பட்ட உலக நாள்

**அன்பாக இருப்போம்! ஆறுதல் பெறுவோம்!!**

இன்றைய தினத்தில் அனைத்துச் சிறார்களும் தங்கள் உரிமைகளை வென்று துஷ்பிரயோகங்கள் ஏதுமற்ற தூய உலகில் மனமகிழ்வுடன் வாழ வாழ்த்துவதுடன், சிறுவர் மேம்பாட்டிற்காய் கைகோத்து பணிபுரிந்துவரும்

சக நிறுவனங்கள், உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்களின் சேவையையும் பாராட்டிப் பெருமைப்படுத்துகின்றோம்.

"நீங்கள் எங்களுடன் எப்போதும் தொடர்பாக இருங்கள்"

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:

மாவட்ட கண்காணிப்புக்குழு,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

**மாவட்ட சிறுவர்பாதுகாப்புக்குழு, அறை எண் – 30,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**
**T.P. 22 2261 - 274**
**222 5657.**

(சி-37934) (26-21-11-18)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 - 08 - 1946 | 16 - 10 - 2000 |

## திருமதி தையல் நாகேஸ்வரி அரியநாயகம்

(தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

திதி: 02-10-2004

விழுதுகள் நிலத்தைத் தொடும் வேளை
விழுந்து போனதோ எமது ஆலமரம்
விழுந்து சரிந்த ஆலமர
நிழலில் ஆறிய பறவைகள்
சிறகொடிந்தது போல் ஆனதே
உறவு உறுதி சிதைந்த நிலையிலே
உறங்க ஓர் இடம் ஒன்றின்றியே
அவைகள் அலைந்து பதைத்து
உலைகின்றனவே!

அம்மா நீங்கள் எமைப்பிரிந்து ஆண்டுகள் நான்காகிவிட்ட போதும் உங்கள் பாச நினைவுகள் ஒருபோதும் எம் நெஞ்சை விட்டகலாது.

191, காரி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.

(37067)(21-11-18)


# No:1 SONY & AIWA




**01.10.2004 இலிருந்து வடமாகாணம் முழுவதும்**

உலகின் **SONY-AIWA** கொம்பனியின்
இலங்கைக்கான ஏக விநியோகஸ்தர்

**SIEDLES Pvt. Ltd.**

SIEDLES நிறுவனத்தின் வடமாகாணத்திற்கான ஏகவிநியோகஸ்தர்கள் **KING PARROTS**

எமது பொருள்களை SIEDLES உத்தரவாத பத்திரத்துடன் பின்வரும் நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

| | | |
|---|---|---|
| "ராஜு ஸ்ரோர்" 67&69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 5224 | "நியூ சிற்றி ரேடேர்ஸ்" 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 3226 | "அன்னம்ஸ்" 114, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 7115 |
| "ஏசியன் எலெக்ரோனிக் சென்ரர்" 11/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 5446 | "V.K.RAJARATNAM" 95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 2056 | "கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்" 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 3857 |
| "துவாரகாஸ்" 22, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | "E.SUBRAMANIAM&CO" 08, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். | "அபிநயா மல்ரி எலெக்ரோனிக்ஸ்" 169, யாழ்.வீதி, மானிப்பாய். T.P.:-077 627 8005 |
| "இளந்துளிர் எலெக்ரோனிக்ஸ்" யாழ்.சாலை, கிளிநொச்சி. T.P.:077 614 7081 | "எழிலகம்" புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி. T.P.:228 5960. | "அல்டி எலக்ரோனிக்ஸ்" 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 2676 |

**SIEDLES உத்தரவாதப் பத்திரமின்றி உங்கள் SONY ஐ வீட்டிற்கு கொண்டுசெல்ல வேண்டாம்**

உங்கள் SONY & AIWA பொருள்களின் நம்பிக்கைக்கு உத்தரவாதம் SIEDLES உத்தரவாதம் மட்டுமே.

**SIEDLES**
Authorized Dealers
KING PARROTS
Kodigamam Road, Nelliady.
T.P.: 077 711 2122

**SIEDLES**
No:01-J, Stanly Road, Jaffna.
T.P.: 222 6744.

"அரச கிளிகள்"
**KING PARROTS**
Jaffna Road, Kilinochi.

(37068)(34-11-18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சிறுவர் தினச் சிந்தனை

எதிர்கால உலகின் தூண்கள் இப்போதைய சிறுவர்களே. அவர்களின் வாழ்வும் வளமும்தான் நமது அடுத்த சந்ததியின் இருப்புப் போக்கைத் தீர்மானிக்கப்போகின்றன.

வருங்கால உலகு வளமுடையதாக இருக்கவேண்டுமாயின் நிகழ்காலச் சிறுவர் சமுதாயத்தை உரிய பாதையில் - செம்மையான திசையில் - சீரிய வாழ்க்கை முறையில் - வழி நடத்துவது கட்டாயமாகும்.

அந்த சமுதாயக் கடப்பாட்டை ஒரு தடவை ஆழமாக மனதில் மீட்டுப் பார்ப்பதற்கு வழி செய்கின்றது இன்றைய 'சிறுவர் தின' சிந்தனை.

இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம். இந்நாளை சிறுவர் தினமாகக் கடைப்பிடிக்கும் நடைமுறை சர்வதேச ரீதியில் 1953இல் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் ஐ.நா. தீர்மானத்துக்கு அமைய இந்தத் தினத்தை கடைப்பிடித்து வழிநடத்தும் பொறுப்பு ஐ.நா. சிறுவர் நிதியம் என்று அழைக்கப்படுகின்ற 'யுனிசெவ்'விடம் (ஐ.நா. கலாசார, கல்வி, நிதியத்திடம்) ஒப்படைக்கப்பட்டது. 1954 இல்தான் அந்த வகையில் சிறுவர் தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்படும் ஐம்பதாவது ஆண்டு தினம் இன்றாகும்.

இந்தத் தினத்தில், சிறுவர்களைப் பற்றி - குறிப்பாகப் போரினால் பாதிப்புற்ற வடக்கு, கிழக்குப் பிரதேச சிறுவர்களைப் பற்றி - ஒரு தடவை சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமானது.

பொதுவாக 14 வயதுக்குக் குறைந்தவர்களையே சிறுவர்கள் என்கிறோம்.

சர்வதேச ரீதியில் - வறுமை, உரிய கவனிப்பின்மை, கல்வி வசதி அளிக்காமை, பராயமடையாத பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல், கொடுமைப்படுத்துதல், பாலியல் சித்திரவதைகள் - துஷ்பிரயோகங்கள் போன்றவற்றுக்கு உட்படுத்துதல் முதலியவை சிறுவர், சிறுமியர்களுக்கு எதிராகப் புரியப்படும் தவறுகளாக அமைந்துள்ளன.

ஆனால், யுத்த பூமியான தமிழர் தாயகத்தில் இது வேறு வடிவத்தில் உள்ளது.

யுத்த அரக்கனின் கொடூரப் பிடியில் பெற்றோர் - பாதுகாவலர்களை இழந்து அநாதைகளாகித் தவித்தல், நேரடியாக யுத்தப் பாதிப்பில் பலியாகுதல், அங்கவீனராதல், கல்வி வசதியை இழத்தல், யுத்தம் ஏற்படுத்திய வறுமையின் கொடூரத்தில் சிக்கிப் பசி, பட்டினியால் பாதிப்புறல் என்பன வடக்கு - கிழக்கின் சிறார்களுக்குரிய பிரச்சினைகளாகும்.

யுத்தம் மலிந்த பூமியின் மத்தியில் சத்தமின்றி அரங்கேறும் சிறார்களின் - சித்தத்தை அதிரவைக்கும் - அவல வாழ்வு சொல்லுந்தரமன்று.

இலங்கைப் புள்ளிவிவரங்களின்படி தீவின் சனத்தொகையில் 43 லட்சம் பேர் சிறார்கள் அல்லது சிறுவர்கள் என்ற பிரிவுக்குள் வருகின்றார்கள்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் கணக்கின்படி பத்து வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்டவர்களில் 51 வீதமானோர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். கொழும்பில் மாத்திரம் மூவாயிரம் சிறுவர்கள் வீதிகளில் அலைகின்றார்கள்.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் கணிப்பின்படி ஐந்து லட்சம் சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் சிறுவர்கள்.

இப்பிரதேசத்தில் மொத்தம் 4 லட்சம் மாணவர்கள் கல்வியை இடையில் விட்டு விலகியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் 150 பாடசாலைகள் யுத்தத்தினால் மூடப்பட்டிருக்கின்றன.

பாடசாலைக் கல்வியை இடையில் துறப்போரின் எண்ணிக்கை இலங்கையின் மற்றப் பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு - கிழக்கில் மிக உச்சமாக உள்ளது என்று தேசிய சமாதான சபை திரட்டிய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அங்குதான் அநேக சிறுவர்கள், குடும்பத்தின் தூண்களான பெற்றோர்கள் இருவரையும் அல்லது அவர்களில் ஒருவரை இழந்து அந்தரிக்கின்றனர் என்ற விவரத்தையும் சமாதான சபை வெளியிட்டிருக்கின்றது.

யுத்தத்தின் எஞ்சிய கொடூரமாகக் காத்துக்கிடக்கும் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் போன்ற பேராபத்தை எதிர்கொள்பவர்களாக இந்தத் தமிழ்ச்சிறுவர்களே உள்ளனர்.

போர் ஏற்படுத்திய மோசமான இழப்புகளால் தம்மை ஆதரிக்கவோ, தாம் ஒதுங்கவோ இடமின்றி போராளிகளின் பாசறைகளில் தஞ்சம் புகும் சிறார்களின் கதையும் இங்குதான் இடம்பெறுகின்றது.

போர் அரக்கனின் நேரடிப் பிடியால் பாதிப்புற்று, அதனால் வெஞ்சினமடையும் - 18 வயதுக்குக் குறைந்த - சிறுவர்கள் வேறு வழியின்றி படைக்குத் தம்மை வலிந்து இணைத்துக்கொள்வதும் அதற்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பப்படுவதும் இப்பிரதேசத்தை ஒட்டிய பிரச்சினைதான்.

வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - கணிசமான பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. யுத்தத்தால் நேரடியாகப் பாதிப்புற்ற இப்பிரதேசத்தின் சிறார்களின் நலனில் அக்கறை காட்டும் சர்வதேச அமைப்புகள் , அங்குள்ள நிலைமையைப் புரிந்துகொண்டு, இச்சிறார்களின் வாழ்வை மேம்படுத்தவும் அவர்களுக்கான உரிமைகள், வசதிகளைப் பெற்றுக்கொடுக்கவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதற்கான பயன்மிக்க திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும்.

அப்படிச் செய்தால் மட்டுமே வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் தவறுகள் என அவை கருதும் விடயங்களைப் பகிரங்கமாகப் பிரசாரப்படுத்தி குற்றஞ்சுமத்தும் தார்மீக உரிமை அவற்றுக்குக் கிட்டும்.

அதைச் செய்யாமல், வேறு சக்திகளின் பிரசார இயந்திரங்களுக்கு ஊதுகுழலாகும் உள்நோக்கோடு குறைகளைக் கூறி ஆர்ப்பாட்டம் செய்வதில் அர்த்தமில்லை என்பதை அத்தகைய அமைப்புகள் உணரவேண்டும்.

பாதிப்புற்ற வடக்கு - கிழக்குச் சிறுவர் நலன் பேணும் திட்டங்கள் வெறும் காகித வரைவுகளாகவும் பிரசாரப் பொருள்களாகவும் இருக்காமல், அவர்களின் வாழ்வை நடைமுறையில் வளமாக்கவேண்டும். அதனை நாடிய நல்ல செயல்வடிவங்கள் பயன்தருவது எப்போது...? நல்விளைவு காண்பது எப்போது...?

# ஆஸ்பத்திரியில் கடமையாற்றியவருக்கு தொண்டர் ஆசிரியராக நியமனம்?

## விசாரணை நடத்துமாறு மாகாண ஆளுநர் உத்தரவு

வைத்தியசாலையில் நிரந்தர எழுதுவினைஞராகக் கடமையாற்றிய ஒருவருக்கு தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனத் திட்டத்தின்கீழ் ஆசிரியர் பதவி வழங்கப்பட்டது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

நீண்டகாலம் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கு அவர்களின் சேவைமூப்பு, இடையீடு இல்லாத தொடர்ச்சியான கடமை நிலை என்பனவற்றை அடிப்படையாக வைத்து கடந்த வருடம் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நியமனத்தில் பத்து வருடங்களுக்கு மேல் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றிய போதிலும் ஒருசில தினங்கள் சேவையில் தடை ஏற்பட்டமையால் நூற்றுக்கணக்கானவர்கள் நிரந்தர நியமனம் பெறமுடியாமற்போனது.

யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் வழங்கப்பட்ட நிரந்தர ஆசிரியர் நியமனங்களில் நான்கு வருடங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய ஒருவருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் செய்த முறையீட்டையடுத்து வடக்கு-கிழக்கு ஆளுநர் விசாரணை நடத்துமாறு பணித்துள்ளார்.

வைத்தியசாலையில் கடமையாற்றிய காலப் பகுதியில் பாடசாலையில் ஆசிரியர் கடமைபுரிந்ததாக பதிவுகள் பேணப்பட்டமை, அந்தப் போலியான பதிவுகளை கோட்டக்கல்வி அதிகாரி உறுதிசெய்து நிரந்தர ஆசிரியர் நியமனத்திற்கு சிபார்சு செய்தமை என்பன தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# இடைக்கால அரசு கிடைக்குமானால் சேது சமுத்திரத் திட்டம் நன்மையளிக்கும்

## கலாநிதி சூசை ஆனந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடக்கு- கிழக்கு இணைந்த தன்னாட்சி அரசு தமிழர் தரப்பிடம் முழுமையாகக் கிடைக்குமானால் புதிதாக அமைக்கப்படும் சேது சமுத்திரத்திட்டம் எமக்கு அதிக நன்மையை அளிக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன்.

யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் அனுசரணைகளுடன், யாழ் சமூக விஞ்ஞான பட்டப்படிப்புக்கள் வட்டம் நடத்திய மாதாந்தக் கலந்துரையாடல், கடந்த செவ்வாய்க்கிழமை பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெற்றது.

"சேது சமுத்திரத் திட்டமும் இலங்கை மீதான அதன் தாக்கமும்" என்ற தலைப்பில கருத்துரை நிகழ்த்தியபோதே சூசை ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சேது சமுத்திரத்திட்டம் அமுலாக்கப்படுமானால் அது இலங்கைத் துறைமுகங்கள் மீது அரசு இராணுவக் கட்டுப்பாட்டை மேலும் இறுக்கமடையச் செயயும்.

இலங்கை இனப்பிரச்சனைக்கு இதுவரை இடைக்காலத் தீர்வோ அன்றேல் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் நிரந்தரத் தீர்வோ எட்டப்படவில்லை. இந்நிலையில் இந்திய அரசு சேது சமுத்திரத் திட்டத்தை அமுல்படுத்தினால் கொழும்பு உட்பட தென்னிலங்கைத் துறைமுகங்களின் கேந்திர முக்கியத்துவம் இழக்கப்பட, அந்த இழப்பை ஈடுசெய்ய ஊர்காவற்றுறை, தலைமன்னார், காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை போன்ற வடஇலங்கைத்துறைமுக நகரங்களை இராணுவ ரீதியில் முற்றாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு அவற்றைப் பெரும்துறைமுகங்களாக விஸ்தரிக்க இலங்கை அரசு முற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

சேது சமுத்திரத் திட்டத்தினால் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் பெற்றுக் கொள்ளப்போகும் கடல்வழி வர்த்தக, பொருளாதார நடவடிகைகை தொடர்பான கேந்திர முக்கியததுவத்தை தமிழ்மக்கள் இறைமையுடன் தமது பிராந்திய வளர்ச்சிக்கு சுதந்திரமாகப் பயன்படுத்தமுடியாது.

உருவாகப் போகும் கேந்திர முக்கியத்துவத்தைப் பாதுகாப்பது என்ற போர்வையில் வடக்கின் துறைமுகங்களை தேசிய சொத்துக்களாக கொழுமபு அரசு பிரகடனப் படுத்தி மேலும் பாதுகாபபு நடவடிக்கைகளையும் இராணுவ யுத்திகளையும் பலப்படுததுவதற்கான வாய்ப்புக்களே அதிகம உண்டு - என்றார். (8-5)



# உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கிழக்கில் மீண்டும் ஒத்திவைப்பு

சாய்ந்தமருது,ஒக்.1

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும், அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் - தமிழ்ப் பிரதேசங்களிலும் ஒக்ரோபர் 23ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மீண்டும் ஒரு தடவை ஒத்திவைக்கப்பட்டுளன. இது நான்காவது ஒத்திவைப்பாகும்.

இதுபற்றித் தேர்தல் திணைக்களம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவித்திருக்கிறது. 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகரசபை உட்பட சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, கருங்கொடித்தீவு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேச சபைகளுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகரசபை, காத்தான்குடி நகரசபை உட்பட அங்குள்ள பிரதேச சபைகளுக்கும் வேட்புமனுக்கள் கோரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

இத்தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும் வேளைகளில் தனது பதவிகளை ராஜினாமாச் செய்வார் என அப்போது அமைச்சராகவிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த அரசைப் பல முறை அச்சுறுத்தி வந்தார்.

தற்போதுள்ள அரசில் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் உள்ள கிழக்கைச் சேர்ந்தோரும் இத்தேர்தல் தொடர்பான வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை கோருமாறு ஜனாதிபதியிடம் கோரியிருந்தனர்.

இத்தேர்தல்கள் தொடர்பான வேட்புமனுக்களை இரத்துச்செய்யுமாறு உரிய தக்கதியில் தேர்தல்களை நடத்தவேண்டாம் எனவும் உத்தரவிடக்கோரி உயர்நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதை வரவேற்றிருப்பதுடன், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அமைக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள் நடத்தப்படுவதே சிறந்தது எனவும் தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தல் ஒத்திவைப்பை முஸ்லிம் காங்கிரஸ் கடுமையாக எதிர்த்துள்ளது. (க-8)

# நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி சமாதான சிலுவை யாத்திரை

## 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.1

நாட்டின் நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி இலங்கை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டுவரும் சமாதான சிலுவை யாத்திரை எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்திரு.சாள்ஸ்கொலின்ஸ் அடிகள் மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை யாழ்.மறைக்கோட்டத்திலும், 12ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை இளவாலை மறைக்கோட்டத்திலும், 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை பருத்தித்துறை மறைக்கோட்டத்திலும், 28ஆம் திகதிமுதல் நவம்பர் மாதம் 3ஆம் திகதி வரை கிளிநொச்சி - முல்லைத்தீவு மறைக்கோட்டத்திலும் இச்சமாதான சிலுவை யாத்திரை நடைபெறவுள்ளது.

இளைஞர்கள் அனைவரையும் கலந்துகொண்டு நாட்டிற்கு நீதியோடு கூடிய சமாதானம் கிடைக்க ஆதரவு வழங்குமாறு யாழ்.மாவட்ட இளையோர் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (8)

### நாளை

புரட்டாதி 16
சனிக்கிழமை
(02.10.2004)
திதி : சதுர்த்தி
முன்னிரவு 8.48 வரை.
நட்சத்திரம் : கார்த்திகை
சுபநேரம்: 3.02 - 4.32
ராகுகாலம்: 09.02 - 10.32
(பழைய நேரப்படி)

**வடபகுதியில் இடம்பெறும்**

# சட்டவிரோதமான மின்பாவனையால் ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபா நஷ்டம்

கொழும்பு,ஒக்.1

வடபகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரால் மின்சார சபைக்கு ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபா நஷ்டமேற்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு, மின்சாரத்தைப் பெறுவோர், முட்கம்பிகள் மற்றும் வேறுவகையான பாதுகாப்புக் கவசங்கள்அற்ற கம்பிகளைப் பயன்படுத்துவது காரணமாக வடபகுதியில் ஆண்டொன்றில் சுமார் 15பேர் வரையில் மின்சாரத் தாக்கங்களுக்கு உள்ளாகி இறப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் கடந்த 8 மாத காலத்தில் வடபகுதியில் மின்சாரம் தாக்கியதில் 9பேர் இறந்துள்ளனர். அவர்களுள் 4பேர் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுவோர் காட்டுப் பகுதிகள் ஊடாகப் பாதுகாப்பற்ற கம்பிகளைப் பயன்படுத்தி மின்சாரத்தைப் பெறுவதன் காரணமாக விபத்துக்களுக்கு உள்ளாவதும் அதிகரித்துள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொலீஸாரும் மின்சார சபையினரும் தீர்மானித்து வருகின்றனர். (10)

### உதயவாக்கு

பிறரை எடைபோட முயல்வதன் முன் நீ அதற்குத் தகுந்தவனா என சுயபரிசோதனை செய்துகொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த
வரதராஜசர்மா சுதாமதி
தம்பதிகளின் ஏக புத்திரியும்
யா/கொக்குவில் இந்துஆரம்ப
பாடசாலையின் மாணவியுமான
செல்வி விந்தியா
அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் 131 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு மனமார வாழ்த்துவதுடன் அவர் சித்திபெற ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா,
பாட்டி, அண்ணா,
தாத்தா,
அம்மம்மா,
சித்தப்பாமார்,
சித்திமார்,
மாமாமார்,
அத்தைமார்.
ஜெகன்நாதன்
(மாமா)
சுளிபுரம்.

## செல்வி விந்தியா

(37030) UTHAYAN Graphics

## பணியாளர் தேவை

**A.M.T.TRANSPORT SERVICE**

ரிங்கர் வேலை தெரிந்த, வில்லுத்தகடு வேலை தெரிந்த வேலையாளர்கள் உடன்தேவை.
(கொழும்பு, வவுனியா வேலைத் தளங்களில் பணியாற்று வதற்கு)
தொடர்புகளுக்கு: **A.M.T.Transport Service,**
**Irupalai Junction, Kopay.**
**T.P. 021-222 5784**

(37060) (34-21-12-11)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி
## தரம் 6 மாணவர் அனுமதி-2005

மேற்படி வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 22.10.2004**

(சி37921)(34-21-11-12) - அதிபர்.

**வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்**

## முன்பள்ளி முதன்மை ஆசிரியர் தேவை

எமது மேற்படி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளிக்கு பெண் முதன்மை ஆசிரியர் தேவை.

தகைமைகள்:
- ✲ க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி
- ✲ முன்பள்ளி பயிற்சிநெறியில் சான்றிதழ் ✲ இத்துறையில் முன் அனுபவம்
- ✲ ஆங்கிலத்தில் கற்பிக்கும் ஆற்றல் ✲ கணனி அறிவு

தகுதியானோர் சான்றுகளுடன் 03.10.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு எமது சனசமூக நிலைய மண்டபத்திற்கு வருகைதரவும்.

திறமைக்கு முன்னுரிமை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

- முன்பள்ளி இணைப்பாளர்.

சம்பியன் ஒழுங்கை.
கொக்குவில் கிழக்கு. (37025)(21-34-11-12)

## நாடக விழா

யாழ்ப்பாணம்,ஒக்.1

பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகமும் நாட்டார் வழக்கியல் கழகமும் இணைந்து வழங்கும் "நாடகவிழா" இன்று வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

கலாபூசணம் செல்லையா மெற்றாஸ் மெயிலின் நெறியாள்கையில் உருவான 'வேழம் படுத்த வீராங்கனை' ஆட்ட நாட்டுக் கூத்து 37ஆவது தடவையாக மேடையேற்றப்படவுள்ளது. தொடர்ந்து முன்னணிக் கலைஞர்கள் வழங்கும் 'பவளக்கொடி' இசை நாடகமும் இடம்பெறவுள்ளது. (ஐ- 204)

## நூல் வெளியீடு

மு.சிங்கராயா எழுதிய
**"மடு அன்னை பிள்ளைத் தமிழ்"**

இடம்: **புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை.**
காலம்: **02-10-2004 பிற்பகல் 4.00**
தலைவர்: *அருட்கலாநிதி S.V.B. மங்களராஜா*
பிரதம விருந்தினர்: *திரு. பா. செந்தில்நந்தனன்*
ஆசியுரை: *அருட்திரு. ம. போல்நட்சத்திரம்*
வாழ்த்துரை: *திரு. S.S. தங்கராசா*
வெளியீட்டுரை: *திரு. நா. குழந்தைவேலு*
நயப்புரை: *பேராசிரியர் எஸ். சண்முகலிங்கன்*
ஆய்வுரை: *கலாநிதி செ. திருநாவுக்கரசு*

'அனைவரும் வருக'

(சி-37916) ***விழாக்குழுவினர்***

விளம்பர அனுசரணை:
**மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்**

## யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2005

2004ஆம் ஆண்டு நடந்த புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்கள அனுமதிக்கப்படவுள்ளதால் எமது கல்லூரியில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று 20-10-2004இற்கு முன் அனுமதிக்காக விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அதிபர்,
(37028) யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## 1st in Com., G.A.Q.

**யாழ்.பல்கலைக்கழக**
**வெளிவாரிப் பட்டப்படிப்புகள்**

- ✲ மேற்படிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ✲ பதிவுகளுக்குரிய ஒழுங்குகள் எம்மால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்:- **02-10-2004**
சனி - 8.00 (ப.நே.)

**D.C.M.**
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(370047)
S. வரதராஜன்.
இயக்குநர். D.C.M.

## கண்ணீர் அஞ்சலி

கைதடி சித்த மருத்துவத்துறையில் மருந்தியல் செய்முறைப் பயிற்சியை ஆற்றிய மதிப்புக்குரிய அமரர் Dr.S.A.குஞ்சிதபாதம அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அவரின் இழப்பால் துயருறும குடும்பத்தினருக்கு எமது பட்டதாரிகள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(37053) பி.எஸ்.எம்.எஸ்.
(34-21-11-12) பட்டதாரிக்ள் சங்கம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த
சிறிவரதன் - கலாரஞ்சினி
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
மாணவியுமான

**செல்வி இனோஷா**

அவர்கள் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு (166 புள்ளிகள்) அவரை மனமார வாழ்த்துவதுடன், அவர் பல்கலையும் பெற்றுக் கல்வியில் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளைத் தொிவிப்பதுடன், அவர் சித்திபெற ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம். அன்புப் பெற்றோர், அப்புச்சி, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், உற்றார், உறவினர் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (37019)(34-21-11-12)

## கூறுவிலை கோரல்

இலங்கை மின்சார சபை பிரதிப் பொதுமுகாமையாளர் வடமாகாண அலுவலகத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் வசதி களுடைய ஒரு கட்டடம் வாடகைக்கு உடனடியாகத் தேவைப் படுகின்றது.

1. 1700 சதுரமீற்றர் கட்டட நில விஸ்தீரணமுடையதாக இருத்தல் வேண்டும்.
2. யாழ். மாநகர கால எல்லைக்கு உட்பட்டதாக இருத்தல வேண்டும்.
3. நீர் வசதி உள்ளதாக 50 பேர் பாவனை செய்யக்கூடிய மலசல கூட வசதியுள்ளதாக இருத்தல் வேண்டும்.
4. சுமாராக 15 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய தான இடவசதி உள்ளதாக இருத்தல் வேண்டும்.
5. குறைந்தது 5 வருடங்கள் பாவனை செய்யக்கூடியதாக ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பமாக இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளை உடைய கட்டட உரிமையாளர்கள் தங்கள் கூறுவிலைகளை பதிவுசெய்யப்பட்ட காணி உறுதிப் பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 04-10-2004இற்கு முன்னதாக கிடைக்கும்படி கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகம்
இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.021 - 222 2496.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்".

(சி-37918) இலங்கை மின்சார சபை. (21-12-11)

## கண்ணீர் அஞ்சலி



*எம்முடைய சக மாணவனும், நண்பனுமாகிய*
**கிறிசாந்துாஸ் யூட்டின**
பாசமிகு தாயார்
**திருமதி மேரி புளோறன்சியா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் எமது நண்பனுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இவருடைய ஆன்மா அமைதியில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணித/விஞ்ஞான பிரிவு 2003 மாணவர்கள
**புனித பத்திரிசியார் கல்லூரி.**

(37054)(34-21-12-11)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## திருமதி
## நேசராஜா இரத்தினா



மண்ணில் மழலையாய் **18-10-1967**
விண்ணில் தெய்வமாய் **01-09-2004**

அன்புத் தெய்வமே! அன்பு காட்டி அரவணைத்து
பண்பும் பாசமும் ஊட்டி எம்மை வளர்த்து
ஆளாக்கிய தெய்வமே! பூத்தமலர் ஐந்தும்
வாடி வதங்குகின்றன... அதற்கோர் ஆறுதல் வார்த்தை
சொல்வீரோ அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எங்கள் நல்வாழ்விற்கு வழி அமைத்துக் கொடுத்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 01-09-2004 அன்று இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்கியோருக்கும், மலர்வளையம் வைத்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தொலைபேசி, பத்திரிகை வாயிலாக எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் சிறந்தமுறையில் மருத்துவம் செய்த மருத்துவர்களுக்கும் இன்முகத்துடன் உதவிய உபசரணையாளர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரம் செய்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (01-10-2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"இரத்தினா மகால்"
சாவற்கட்டு, மானிப்பாய். (37033)(21-11-12-21)

**குடும்பத்தினர்**
**கணவர், பிள்ளைகள்.**

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 25 - 08 - 1913
மறைவு 13 - 10 - 2003

### அமரர் ஆறுமுகம் ஐயம்பிள்ளை

(செல்லத்துரை - முன்னாள் ஜாஎல வர்த்தகர்)

பார் போற்றும் உத்தமராய்ப்
பாரினில் வாழ்ந்தீரே!
விண்ணுலகம் தாம் சேர்ந்து
ஓராண்டு ஆனதையா
எந் நாளும் உம்மை நினைத்தே
இப் பூவுலகில் நாம் வாழ்கின்றோம்
ஓம் சாந்தி!

ஐ.சோதிநாதன்
(சோதி மாளிகை)
நீலிப்பந்தனை, காரைநகர்.


மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(37011)(34-21-11-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உலகம் உன்னை மறக்குமா?

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பிறந்ததினம் இன்று கொண்டாடப்படுகின்றது. நடிகர் திலகம் நடித்த பல படங்களின் கதாசிரியராகவும், இயக்குநராகவும் இருந்தவர் 'வியட்னாம் வீடு' சுந்தரம். அவர் சிவாஜி பற்றிக் கூறும் கருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன.



நான் பார்த்ததை, கேட்டதை, படித்ததை, அவரிடம் சொல்லும்போதெல்லாம் அப்படியே அதைப் பதிய வைத்துக்கொள்வார். சமயம் வரும்போது அதைப் படங்களில் அவர் எடுத்து விடும் அழகு இருக்கிறதே அது வெகு அருமை.

பனையேறுபவர்கள் அரிவாளால் பனை மரத்தைக் கூர் தீட்டிப் பார்க்க ஒரு தேய்ப் புத் தேய்ப்பர். அந்த லாவகத்தைக் 'காவல் தெய்வம்' படத்தில் பனையேறி சாமுண்டியாக நடித்தபோது செய்து காண்பித்தார் சிவாஜி.

'ஞான ஒளி'யில் சிவாஜியின் அந்தோனி கதாபத்திரம் இடதுகைப் பழக்கமுடையது. அதில் ஒரு காட்சியில் மகள் சாரதா, ஸ்ரீகாந் துடன் கூடியிருப்பதைக் கண்டு கொதித்துப் போய், ஸ்ரீகாந்தை வெட்ட முயற்சிப்பார். அதைத் தடுக்க முற்படுவார் நண்பன் லாரன்ஸ் (மேஜர் சுந்தர்ராஜன்).

மூவரும் தோட்டத்திற்குள் கட்டிப்புரண்டு உருள்வர். சிவாஜி இடது கையிலுள்ள அரி வாளை விடக்கூடாது. உருளும்போது ஸ்ரீகாந்த மீதோ, மேஜர் சுந்தர்ராஜன் மீதோ, தன் மீதோ அரிவாள் படாமல் நடிக்கவேண்டும். சிறிது தவறினாலும் அரிவாளால் விபரீதமாகிவிடும். அப்படி நடித்துமுடித்ததை அடுத்து மேஜர் சுந் தர்ராஜனின் பேச்சுக்குச் சிவாஜி சிறிது அடங் கினாலும், கட்டுப்படுத்தமுடியாத கோபத்தை



## ஒரு மாபெரும் கலைஞன் இவன்!

அருகிலுள்ள வாழை மரங்களை வெட்டி வீழ்த் தித் தணித்துக் கொள்வார். வாழை மரத்தை வெட்டி வீழ்த்துவது எளிதல்ல; அதிலும் இடது கையால் வெட்டுவது சிரமமான விஷயம். அதற் காகக் கடுமையான பயிற்சி எடுத்துக்கொண்டு நடிக்க வந்தார் சிவாஜி.

'வியட்நாம் வீடு' படம் பார்த்தவர்களெல் லாம், சிவாஜி இவ்வளவு அழகாகப் பிராமண பாஷை பேசி எப்படி நடித்தார்? என்று கேட் டனர். 'வியட்நாம் வீடு' நாடகமாக நடிக்கப் பட்டு, படமாக உருவானது. அது அரங்கேறு வதற்கு முன் வரை பிராமண சமூகத்தவர் களுடைய நடை, உடை, பாவனைகள், அவர் களது தோற்றம் எல்லாம் கவனித்துக் கொண் டேயிருந்தார் சிவாஜி. அது பற்றிய விஷயங் களைச் சேகரித்துக்கொண்டேயிருந்தார்.

அவருக்கு நிறையப் பிராமண நண்பர்கள் உண்டு. அந்த நட்பு வளையத்திற்குள் அவர் சென்றுவிடுவார் அல்லது இதுபோல் சமயங் களில் அவர்களைத் தன்னிடம் வரவழைத்து

**தொகுப்பு**
**ஜெயஸ்ரீ, ராஜராஜன்.**

விடுவார். அவர்கள் அறியாதபடி அவர்களது நடவடிக்கைகள் பற்றிக் கவனிப்பார்.

'வியட்நாம் வீடு' படத்தில் சிவாஜியின் பிரஸ்டீஜ் பத்மநாபன் கதாபத்திரத்தின் காது களில் சுருள்சுருளாக முடி முளைத்திருக்கும் சிவாஜியின் காதுகளில் சாதாரணமாக அப்படி முடி இருக்காது. 'வியட்நாம் வீடு' படத்தில் காதுகளில் செயற்கை முடி ஒட்டிக்கொண்டார். இப்படி சிறிய நுணுக்கமான விஷயங்களில் கூட ஆழ்ந்த கவனம் செலுத்தினார் சிவாஜி.

சிவாஜியின் நடிப்புலக வரலாற்றில் 'கௌர வம்' முக்கிய இடத்தை வகித்த படம். நான் தயங்கினாலும், 'பண்ணுடா' என்று சிவாஜி என்னை இயக்குநராக்கிய படம். 'சார்லஸ் லாப் டன்' நடித்த, 'விட்னஸ் பார்தி பிராசிகியூஷன்' ஆங்கிலப் படம் போல், ஒரு படம் நடிக்க வேண்டும். அதுபோல், ஒரு கதை பண்ணிக் கொண்டுவா... என்று எனக்குச் சிவாஜி உத்ர விட, அதில் பிறந்ததுதான் 'கௌரவம்'. தொழில நுட்பத்தரம் வேண்டுமென்பதற்காக ஒளிப்பதி வாளர் வின்சென்டை இணைத்தார் சிவாஜி.

'கௌரவம்' படத் தயாரிப்பாளரான இந்து ரங்கராஜன், தன் நண்பர்களான வீனஸ் பிக் சர்ஸ் கோவிந்தராஜன், கிருஷ்ணமூர்த்தி ஆகி யோரிடம் ஆலோசனை பெறுவதற்காக என் னையும் அழைத்துச் சென்றார்.

அவர்களோடு பேசிக் கொண்டிருக்கையில், கோவிந்தராஜன், கிருஷ்ணமூர்த்தி இருவம் இந்தப படத்தில் பாரிஸ்டர் ரஜனிகாந்த் வேடத் தில் சிவாஜியும், மகன் கண்ணன் வேடத்தில் எம்.ஜி.ஆரும் நடித்தால் பிரமாதமாக இருக்



'வியட்நாம் வீடு' சுந்தரம்

கும். 'கூண்டுக்கிளி'க்குப் பின் இருவரும் இணைந்து நடிக்கவேயில்லை. இப்படத்தில் இருவரும் நடித்தால், தமிழ்ச் சினிமா வரலாற் றில் புதுமை படைத்தது போலிருக்கும் என்றனர்.

அவர்கள் கூறியதோடு நில்லாமல், எம்.ஜி. ஆரிடமும் என்னை அனுப்பிவைத்தனர். எல் லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக்கொண்ட எம்.ஜி.ஆர்., தந்தை, மகன் இருவேடங்களை யும் சிவாஜியே செய்யட்டும். இந்தப் படத்தின் கதைப் போக்கின்படி இரு வேடங்களிலும் சிவாஜி நடிக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்தார்.

அதன்படியே இரு வேடங்களிலும் நடித் தார் சிவாஜி. படம் பார்த்த எம்.ஜி.ஆர்., சிவா ஜியின் இரு வேட நடிப்பைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். அவர் மட்டுமன்றி, இந்திப் படவுலகிலிருந்து ராஜேஷ்கண்ணா, திலீப்குமார், ராஜ்குமார் என்று முன்னணி நட்சத்திரங்களெல் லாம் படம் பார்த்துவிட்டு சிவாஜியைப் புகழ்ந்த விதத்திற்கு அளவில்லை. அதில் நானும் நனைந்து மகிழ்ந்தேன்.

சிவாஜியின் அன்னை இல்லத்தில் முன் மண்டபத்திலிருந்து மாடிக்குச் செல்ல மரப் படிக் கட்டுகள் உண்டு. அதில் அவர் கம்பீரமாக ஏறிச் சென்றதைப் பலமுறை பார்த்திருக்கின் றேன். அதை மனதில் வைத்துக் 'கௌரவம்' படத்தில் ஒரு வசனத்தைச் சேர்த்தேன்.

தன் உழைப்பின் மேன்மையைச் சொல் வதற்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ள வழக் குகளுக்கான ஆவணங்களைச் சுட்டிக்காட்டி இவை சாதாரணமானவையல்ல. என் முன்னேற் றப் பாதையின் படிக்கட்டுக்கள் என்று வசனம் பேசுவார்.

அன்னை இல்லத்தின் அந்த மரப் படிக் கட்டுக்கள் அண்மையில் தீபால் எரிந்து சாம் பலானதை அறிந்து மனம் கலங்கிப் போனேன். சிவாஜியின் மரணத்தைப் போலவே இதுவும் என்னை வெகுவாகப் பாதித்தது.

'கௌரவம்' வெளிவந்த போது சிவாஜியின அன்னை இல்ல மரப்படிக்கட்டுகளின் மேல் அந்தப் படத்தில் ஜார்ஜ் மன்னராக சிவாஜி கம்பீரமாக நிற்கும் பெரிய படம் பொருத்தப் பட்டு நீண்டகாலம் அங்கே வருவோர், போவோரை யெல்லாம் கவர்ந்திருந்தது.

அந்தப் படியை 'வியட்நாம் வீடு' பட வசன மொன்றிலும் 'வீட்டுக்கு வீடு வாசற்படி உண்டு. ஆனா, என் படி வித்தியாசமானது' என்று சிவாஜி பேசுவது போலச் சேர்த்திருந்தேன்.

சிவாஜி மிகச் சிறந்த கலைஞர் மட்டுமல்ல, மிகச் சிறந்த மனிதரும் கூட. மனதில் எதை யும் பூட்டி வைத்துக்கொள்ளாதவர். 'உத்தம புத்திரன்' படத்தில் 'யாரடி நீ மோகினி' பாட லில் நீங்கள் சிறப்பாக நடனமாடினீர்கள்... என்று பாராட்டினால், நான் எங்கே ஆடினேன். நடன இயக்குநர் ஹீராலால் என்னை ஆட்டுவித் தார், அவரைத்தான் பாராட்டவேண்டும் என்பார்.

ஒரு விஷயத்தை சிவாஜி சொல்லும்போது உடனே அதனை மறுத்துப் பேசக்கூடாது. நமக்கு அது பிடிக்கவில்லை. அவர் எதிர் பார்ப்பது நம்மிடம் இல்லை என்பதை மௌன மாக இருந்து காட்டிவிட்டால் நம்மிடம் இறங்கி வந்துவிடுவார்... என்ன பிடிக்கவில்லையா, கோபமா? என்று கேட்பார்.

'வா கண்ணா வா...' படத்தில் வாலி எழு திய ஒரு காலத்திலே 'என்னைக் கட்டிப்போட ஒரு ராஜ்ஜியம் இருந்தது... இன்று ராஜ்ஜியம் இல்லை, ராஜாவும் இல்லை. பூஜ்யம் வந்தது' என்ற பாடல் வரிகள் சிவாஜியின் தம்பி சண் முகம் இறந்த பின் சிவாஜிக்கு ஏற்பட்ட பாதிப் பின் விளைவுகளே. அதே வரிகளில் சிவாஜியை நிறுத்தித் தற்போது கலங்கி நிற்கிறேன். அவ ரைப் பற்றிய நினைவுகள்தான் எனக்கு ஆறு தல் என்று கூறி முடித்தார் 'வியட்நாம் வீடு' சுந்தரம். *

சிவாஜியிடம் இருந்த சகிப்புத் தன்மையை இன்றைக்கும் வியக்கின்றேன். இன்று நான் நடிகராகத் தலையில் விக் வைத்து, முகத்தில் தாடி ஒட்டி நடிக்கிறேன். அதனால், ஏற்படுகிற எரிச்சலை என்னால் சிறிது நேரம் கூட சகித்துக் கொள்ளமுடியவில்லை. ஆனால், சிவாஜியோ நாள் முழுவதும் விக், தாடி, மீசை வைத்து, அதற்காகச் சிறிதும் முகச்சுளிப்புக் காட்டாமல் நடித்த, அந்தப் பொறுமை அசாதாரணமானது.

அவர் ஒரு கதாபாத்திரத்திற்காக ஒப்பனை செய்துகொள்வது மட்டுமன்றி, தண்ணீரில் தேங் காய் எண்ணெய்யைக் கலந்து ஒப்பனையைக் கலைக்கிற பாங்கும் அழகாக இருக்கும். நாடக உலகத்திலிருந்து வந்த அனுபவங்கள் அவை.

ஒரு கதாபாத்திரத்தைச் சிவாஜி உள்வாங் கத் தொடங்கிவிட்டால் அந்தப் படம் முடியும் வரை அதே சிந்தனையில் இருப்பார். அந்தச் சிந்தனைக்குத் தீனிபோட வேண்டுமென்பதற் காகவே என்னை அருகில் வைத்துக்கொள்வார்.

# உள்ளூராட்சித்திணைக்கள எழுதுநர்களின் வருடாந்த இடமாற்றப் பட்டியல் வெளியானது

யாழ்ப்பாணம்,ஒக்.1

அடுத்த ஆண்டு முதல் வடக்கு - கிழக் கில் உள்ள உள்ளூராட்சித் திணைக்களங்க ளில இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள எழுது நர் தரம் II 'அ', 'ஆ' ஆகியோரின விவரங்கள மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களின் விவரமும் இடமாற்றம் பெறற இடங்களும்வருமாறு:-

மா.செந்தூரன் (கல்முனை மா.நகரசபை), செல்வி ப.விஜயலெட்சுமி (யாழ்ப்பாணம் மா. நகரசபை), திருமதி சாந்தினி திருஞானசுந்தரம் (வடமராட்சி தெற்கு, மேற்கு பி.சபை), திருமதி எஸ்.அனுரதி (வல்வெட்டித்துறை ந.சபை), திருமதி சிவம் செல்வமகாலட்சுமி (பருத்தித்துறை பி.சபை), திருமதி ஜீவசிகாமணி லோகேஸ் வரன் (நல்லூர் பி.சபை), திருமதி மகாலட்சுமி மகாலிங்கம் (வேலணை பி.சபை), திருமதி சரசீதா (வலி.தெற்கு பி.சபை), செல்வி கு.கௌரி (திருகோணமலை ந.சபை), சீ.மனோகரன் (நல் லூர் பி.சபை), திருமதி சுதாயினி ஞானச்சந் திரன் (நல்லூர் பி.சபை), திருமதி க.ஜானகி (நல்லூர் பி.சபை), எஸ்.ஓ.சுகுணராஜ் (வலி.தெறகு பி.சபை), செல்வி ப.பத்மலோஜினி (வலி. தெற்கு பி.சபை), சு.தியாகராசா (வலி.தெறகு பி.சபை), செல்வி சி.தமயந்தி (வடமராட்சி தெற்கு, மேற்கு பி.சபை), க.பாலசுப்பிரமணியம், சி.தயா பரன் (வலி.மேற்கு பி.சபை), செல்வி கு.யசோதா (யாழ்ப்பாணம் மா.நகரசபை), செல்வி ச.தர் ஷிகா (வலி. வடக்கு பி.சபை), செல்வி கி.ஸ்ரீரஞ் சினி (பருத்தித்துறை நகரசபை), நா. இராஜமுகுந்தன் (வலி.கிழக்கு பி.சபை), திருமதி சங்கீதா கோபிநாத் (பருத்தித்துறை பி.சபை), க.பாலசுப்பிரமணியம் (வலி.மேற்கு பி.சபை), வே.யோகராசா (சாவகச்சேரி நகரசபை), கஜெயானந்தன் (பிரா.உ.உ.ஆ.அலுவலகம் யாழ்ப்பாணம்), செல்வி ஐ.வ... (நல்லூர் பி.சபை), செல்வி வி.பிரேமாவதி (வலி.மேற்கு பி.சபை), செல்வி த.யயமதி (வலி.தெறகு, மேற்குப் சபை), செல்வி நா.கலாரஜனி (வலி. வடக்கு பி.சபை), திரு டே.அகிலன் (வலி தெற்கு, மேற்கு பி.சபை), செல்வி மா.மாலதி (வலி.தெற்கு,மேற்குபி.சபை), திருமதி ச.சூரிய குமாரி (மட்டக்களப்பு மாநகரசபை), செல்வி ம.ஜெகஜனனி (யாழ்ப்பாணம் மா.நகரசபை), ந.கணேந்திரன் (வலி. வடக்குப் பி.சபை), செல்வி இ.குகானந்தி (வலி. தெற்கு மேற்கு பி.சபை), திருமதி கரோலின் றெனோ லெஸ்லி (யாழ்ப்பாணம் மாநகரசபை), கி.புவனேந்திரன் (வலி.கிழக்குப் பி.சபை), ஆ.நித்திலவர்ணா (ஊர்காவற்றுறை பி.சபை), ச.கமலகாந் (வலி. வடக்குப் பி.சபை), வை.புவனேநதிரா (வவு னியா நகரசபை), செல்வி இ.மதிரூபா (யாழ்ப் பாணம் மாநகரசபை), செல்வி து.அகல்யா (வலி. வடக்கு பி.சபை), திருமதி பேபி சுலோசனா சுகுமார் (வலி. கிழக்கு பி.சபை), சி.சிவப்பிரகாசம் (சாவகச்சேரி ந.சபை), நா.தங்கவேல் (பச் சிலைப்பள்ளி பி.சபை), செல்வி தி.தர்சினி (சாவகச்சேரி ந.சபை), செல்வி வி. கவிதா (பச்சிலைப்பள்ளி பி.சபை), திருமதி கோ.முகந் தினி (சாவகச்சேரி ந.சபை), ச.சுப்பையா (பச் சிலைப்பள்ளி பி.சபை), செல்வ தேகார்திகேயினி (வலி.கிழக்கு பி.சபை), செல்வி பா.கிறாந்தினி (வல்வெட்டித்துறை ந.சபை), கோ.கணேசன் (மண்முனை தென். எருவில் பற்று பி.சபை களுதாவளை), கே.குணம் (மண் முனை தென் மேற்கு பி.சபை பட்டிப்பளை), ரி.ரவிராஜ் (மண்முனை தென் எருவில்பற்று பி.சபை களுதாவளை), பி.குணரெத்தினம் (போரதீவுப் பற்று பி.சபை), சி.பாக்கியராஜா (கல்முனை மா.நகரசபை), எம்.ஏ.முகைதீன் (சம் மாந்துறை பி.சபை), சத்திறமீஸா முகம்மது (காத்தான் குடி நகரசபை), ஜனாப் அ.லெ.மு. கனீபா (ஏறாவூர் நகர்), எம்.எம்.கஸன் (ஏறாவூர் பற்று), சித்தி பரீதா (ஓட்டமாவடி), தரங்கதீபானி ஜெயரெட்ன (திருகோணமலை ந.சபை), செல்வி எம்.நிரஞ்சனி (பி.உ.உ.ஆ.அலுவலகம், திரு கோணமலை), டபிள்யூ. எம்.ஸ்ரீசேன (மொற வேவா பி.சபை), சி.என்.நிமல்ஜெயதிலக (பி.உ.உ.ஆ.அலுவலகம் அம்பாறை).(8-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுப்பயிற்சி கற்கைநெறி

சமாதானமும் அபிவிருத்திக்குமான கற்கை:

**கோளம் தழுவிய உள்ளூர் அபிவிருத்தி**

**Research Training Course**

**Peace and Development Studies: Local Development In Global Context**

*(Monday 14 Nov. to Friday 18 Nov. 2004)*

நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக்கழக சமூக வியல், புவியியற்றுறையும் மற்றும் நோர்வே, விவசாயப் பல்கலைக்கழகமும் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை யுடன் இணைந்து மேற்குறிப்பிட்ட கற்கைநெறி ஒன்றினை புவியியற்றுறையில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து 31-10-2004 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான தகைமை**

பின்வரும் தகைமைகளுள் ஏதேனும் ஒன்றைப் பூர்த்திசெய்தவர்கள் கற்கைநெறிக்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சமூக, விஞ்ஞான கற்கைநெறிகளில் யாதேனும் ஒன்றில் பட்டம் பெற்றுள்ளவர்கள்.
2. பின்வரும் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுள் ஏதேனும் ஒன்றில் குறைந்த பட்சம் 5 வருட கால அனுபவம் கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் தரத்தில் பதவி வகிப்போர்.
   திட்டமிடல் பிரிவுகள், கல்வி, விவசாயம் கடற்றொழில் கைத்தொழில் ஆகிய திணைக்களங்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்.
3. கற்கைநெறிக்காலம் ஒரு வாரம் (14-11-2004 - 18-11-2004)
4. விரிவுரைகள் வார நாளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை
5. கற்கை நெறிக்கு 40 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்
6. போதனாமொழி - தமிழ்/ஆங்கிலம்
7. பயிற்சி - இலவசம்.
8. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்து பதிவுத் தபாலில், அத்துடன் முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட 23X10 செ.மீ. அளவிலான தபால் உறை ஒன்றையும் இணைத்து 31-10-2004இற்கு முன் தலைவர் புவியியற்றுறை யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

கலாநிதி ஏ.எஸ்.சூசை,
கற்கைநெறி இணைப்பாளர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


பேராசிரியர் கா.குகபாலன்,
தலைவர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(37024) (26-34-19-44)




மிருசுவில் வடக்கைச் சேர்ந்த சாந்தீபன் - நிலோஜினி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி நிஷானி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (2004.10.01 )வெள்ளிக்கிழமை சரசாலை வடக்கிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.நிஷாக்குட்டியை அவரது அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா,அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, கபில்மாமா, சரண்யாசித்தா, குஞ்சுமாமா-மாமி, லண்டனில் வசிக்கும் ராசாமாமா-மாமி, கிருபன் மாமா-மாமி , அத்தான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர் குடும்ப நண்பர்கள் அனைவரும் மிருசுவில்வடக்கு குருக்கள் மாவடிப் பிள்ளையார் அருள் பெற்று சீரும் சிறப்புமாக பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென உளமார வாழ்த்துகின்றனர்.

அப்பா - அம்மா
சு.சாந்தீபன்,
உபதபாலதிபர், மிருசுவில்.




கோபம் வந்தால் என்ன பேசுகிறோம் என்று
நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.
வார்த்தைகள் கத்திபோல மனதைக் காயப்படுத்தும்
காயங்கள் ஆறாத புண்களாக மாறும்.

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

உங்களால் மற்றொருவர் மனம்
சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை
யோசித்துப் பாருங்கள்.
வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க
நீங்களும் உதவுங்கள்

**இல்லத்து வன்முறைகளை**
**இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

THOMPSON ASSOCIATES

எச்சரிக்கை: வார்த்தைகள் அபாயகரமானவை.
அவதானமாய்க் கையாளுங்கள்.

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர்களைப் புரிந்துகொள்ளுங்கள்

சிறுவர்கள் என்பவர் அனைத்துலகத்துக்குமான பொதுப்படையான சொத்து. இவர்கள் அனைவரது கண்களுக்கும் குளிர்ச்சியாக அனைவரையும் மகிழ்விக்கும் கள்ளம் கபடமற்ற வெள்ளை மனம் கொண்ட பிஞ்சுகள்; வாழ்க்கை என்ற முழு வாழ்வியத்தை அனுபவிக்க வளர்க்கப்படவேண்டியவர்கள். அன்பு என்ற சுவருக்குள், சுதந்திரம் என்ற கதவால் திறந்து விடப்படவேண்டியவர்கள். நாளை பூக்கப்பட வேண்டிய இளம் மொட்டுக்கள். அவர்களுக்குள் மனிதம் என்ற ஆறறிவு, விருப்பு, வெறுப்பு என்பன அதிகமாகக் காணப்படுகின்ற, சிந்திக்கத் தொடங்குகின்ற பருவம். இவர்களது சிந்தனைக்கும், விருப்பு வெறுப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டிய பொறுப்பு பெற்றோரிடமும் பெரியவரிடமும் அதிகமாகக் காணப்படவேண்டியது அவசியமாகின்றது.

ஆனால், இங்கு சிறுவர்கள் எவ்வாறு வளர்க்கப்படவேண்டியவர்கள் என்ற நிலை தவறி, சிறுவர்களை எவ்வாறெல்லாம் பார்க்கின்றார்கள் என்பது அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகின்றது. சிறுவர்களின் உரிமைப் பசிக்கு தீனிபோட வேண்டியவர்கள் பெரியோர்கள், பெற்றோர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், கல்விமான்கள்...... என நீண்டு ஒவ்வொருவரும் என்ற நிலைக்கு வந்தடைகின்றது.

எது எந்த நாட்டில் சரிவர நடக்கிறது? சிறுவர்கள் என்ற பகுப்பில் எத்தனை சிறுவர்கள் சிறுபராயத்தை முறையாகச் சரிவர அனுபவிக்கின்றார்கள் என்பது காலத்தின கேள்வி. அடிப்படையில் உரிமை மறுக்கப்பட்டதும். பெற்றோரின் கெடுபிடியால் சுதந்திரத்தைத்தேடி தனிவழி புறப்படும் சிறுவர்களையும், அன னியராலும், அ யோ க கியராலும் பாலியல் ரீதியில் பாவிக கப்படும் சிறார்களையும், படுகொலை என்ற ரீதியிலும், கடத்தல் என நாளுக்கு நாள் சிறார்கள் கடத்தப படுவதும், வறுமையால வாடும் சிறார் களையும், அடசயபாத்திரம் போல் பிச்சைக்கென பாத்திரம் ஏந்தும் சிறார்களும், வீட்டு வேலைக் கென - தோட்ட வேலைக்கென - சிற்றுண்டிச் சாலைக்கென - சிறார்கள் வேலைக்கு அமர்த் தப்படுவதும் கல்வி கற்கும் பராயத்தில் கடை, தெருக்களில் வியாபாரம் செய்யும் சிறுவர்களையும் தாங்கி நிற்கின்றது சர்வதேசம்.

பெற்ற தந்தையுடன் மகளை விட்டுச் செல்வதே பயங்கரமாகி விட்டகாலம், 'தாய்க்கும் - மகனுக்குமான உறவை' இணைத்துப் பார்க்கும் தந்தை: தெருநாய்களைவிட மோசமானவர் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறுவர்கள் பெற்றோருடன் தங்கிவாழ்பவர். தங்கிவாழும் உரிமையுடையவர்கள். இவருக்கான நல்லொழுக்கம், நல்லறிவு என்பது ஊட்டப்பட வேண்டியது. அடிப்படைக் கல்வி ஒவ்வொரு சிறுவர்களுக்குமான சொத்தாகும். எத்தனை சிறுவர்கள் கல்வியைப் பெற்றுக் கொண்டு இருக்கின்றனர். எத்தனை சிறுவர்கள நல்லொழுக்கம், நல்லறிவு உடையவர்களாக இருக்கின்றனர். எத்தனை சிறுவர்கள் அனைத்து வசதியுடன் இன்பமாக வாழ்கின்றனர்? என்பது கேள்விக்குறியான ஒன்று!...

எத்தனை இடங்களில் சிறுவாகள், முடங்கிப் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், செயற்பாட்டுச் சுதந்திரம்... என எந்தச் சுதந்திரமும் இன்றி வாழ்கின்றனர். எதிர்காலம் என்பது காலங்களில் மிக நீண்டதும், முக்கியமானதும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும், சிறுவர்கள் நாளைய எதிர்காலத்தின் அத்திபாரங்கள் "அத்திபாரம் சரியானதுதான் எனில் கட்டடம் தானாக எழும்" அத்திபாரத்துக்குச் சரியான ஊட்டத்தை சிறுவர்களுக்கு இடவேண்டிய தேவை உள்ளது. சிறுவர்கள் தமது விருப்பு வெறுப்பை வெளிப்படுத்தவும், அவர்களது ஆலோசனைகளைக் கேட்பதற்குமான பெறறோராய், பெரியோராய், பொறுப்புடையவராய் ஒவ்வொருவரும் மாறவேண்டும். இவர்களது ஒவ்வொரு மாற்றமும் சிறுவர்களிடத்தே புதிய தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்கள் நாளை தமது எதிர்காலத்தை முன்னெடுக்கும் முன்மாதிரிகளாக மாற அனைவரும் வாய்ப்பளியுங்கள்.



ஒவ்வொரு மனதிலும் சிறுவர்கள் பற்றிய, அவர்கள் உரிமைகள் பற்றிய தெளிவு காணப்படவேண்டும். இவர்களுக்கான உரிமைகள், இவர்கள் மீதான பார்வையில் சர்வதேச சமூகம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதைவிடக் கிராமம் - மாவட்டம் - மாகாணம் - நாடு - உலகம் என படிமுறை, படிமுறையான பலாபலன்களைச் சர்வதேச சமூகம் அனைத்திலும் சிறுவர்கள் மீதான அக்கறை ஒலிக்க வேண்டும். வெறுமனே சிறுவர்தினம் சிறுவர்களுக்கான உரிமையை வென்றெடுக்காது. பெற்றோர்கள், பெரியோர்கள், கல்விமான்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அனைவரும் சிறுவர்கள் மீதான பார்வையை வெளிச்சத்துக்கு கொண்டுவரவேண்டும்.

சிறுவர்களுக்கு உதவமுடியாவிட்டாலும், அவர்களைத் துன்புறுத்தாது வாழவேனும் பழகிக்கொள்வோம். இவ்வாறு நாம் அனைவரும் இருந்தால், மாமனிதர் ஆவதுடன் சிறுவர்கள் தமக்கான உரிமையை வென்றெடுக்க ஏதோவகையில் உதவிய பலாபலன் நம்மைச் சேரும்.

**கே.லோகதர்சினி**
**நாடகமும் அரங்கியலும்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

சிறுவர்களை உருவாக்குபவர் யார்? என்ற வினா ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்திடம் தான் உண்டு என்பதில் ஐயமில்லை, தயவு செய்து சிறுவர்களது உரிமைகளுக்கு இயலுமான வரை பங்களிப்புச் செய்யுங்கள், அவர்களைத் துன்புறுத்தாதீர்கள். அவர்கள் துயரப்படுவதால் எத்தகைய நல்லதோர் சந்ததி நாசமாகும் என்ற பின்னணியைப் புரிந்துகொள்ளுங்கள். ★

# புலமைப் பரிசில் பரீட்சையும் புறக்கணிக்கப்படும் தகுதியும்

இந்த வருடத்திற்கான ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி இருக்கின்றன.

இப்பெறுபேறுகள் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெற்றோரது கவனத்தை மட்டுமல்ல அடுத்த வருடம் இந்தப் பரீட்சையை எடுக்க இருக்கின்ற மாணவர்களுடைய பெற்றோர்களுடைய கவனத்தையும் ஏன் ஆண்டு ஒன்றில் தமது பிள்ளைகளைச் சேர்க்க இருக்கின்ற பெற்றோர்களுடைய கவனத்தையும் கூட ஈர்த்துள்ளது.

அத்துடன், பிரபலமான ஆரம்ப பாடசாலைகளும் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களும், தமது நிறுவனங்களில் கல்வி கற்று வெட்டுப் புள்ளிக்கு மேலாகப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி, தமது நிறுவனங்களுக்குப் பெருமை சேர்க்கப்போகிறார்கள்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி ஆற்றலினை வளம்படுத்துவதில் சிரத்தை காட்டுவதையோ, அல்லது நிறுவனங்கள் தமது செயற்திறனை விளம்பரப்படுத்துவதையோ எவரும் குறைகூறமுடியாது.

இருந்தும், கல்வியின் ஆரம்ப நிலையில் இருந்து இடைநிலைக் கல்விக்குப் புகும் ஒரு மாணவரது அறிவாற்றலை, திறமையை இந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை இன்று சரியான முறையில் கணிப்பிடுகின்றதா?

இந்தப் புலமைப்பரிசில் பரீட்சைத் திட்டம் என்ன நோக்கத்திற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது?

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள திறமையான மாணவர்களது இடைநிலைக்கல்விக்கு உதவும் நோக்குடன் இப்புலமைப் பரிசில் திட்டம் அரசால் கொண்டுவரப்பட்டது.

கடந்த நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் கல்வியில் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய தீவகத்தில் வறுமைக் கோட்டின் கீழ் இருந்த நூற்றுக்கணக்கான திறமையான மாணவர்கள் இப்புலமைப்பரீட்சையில் சித்தி எய்தி, வேலணை மத்திய மகா வித்தியாலத்தில் (தற்போது சேர் வை.துரைச்சாமி வித்தியாலயம்) தமது இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து, பல்கலைக்கழகம் வரை சென்றவர்கள், நிர்வாக சேவை அதிகாரிகளாகவும், கல்வி அதிகாரிகளாகவும், அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் இந்தப் புலமைப்பரிசில் பரீட்சை அந்த மாணவர்களை உருவாக்கியது.

இதே போன்றே யாழ்/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பல கல்வி நிறுவனங்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை உள்வாங்கி ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வை வளப்படுத்தியவை.

ஆனால், இன்று இப்பரீட்சையின் நோக்கமே தலை கீழாக மாறியுள்ளது. நம் நாட்டிலே ஒரு பரீட்சார்த்தி ஒரு பாடத்திலே சித்தி பெறவேண்டுமெனில் குறைந்தது 35 வீதமான புள்ளிகளைப் பெறவேண்டும். அப்படி இருந்தும் இந் நாட்டின் கல்வி வளங்களின் பற்றாக்குறை, துரதிர்ஷ்டமான வெட்டுப்புள்ளி என்னும் வாள் கொண்டு எமது செல்வங்களின் கல்வி வளர்ச்சியை வெட்டிச் சரிக்கின்றது.

இதில் மிகவும் வேதனைக்குரிய விடயம் என்னவெனில் - [illegible] ளையும் பெற்று, ஒரு நகர்ப்புறப் பாடசாலையில் கற்ற மாணவன் 124 புள்ளிகளைப் பெற்று சிறந்த ஒரு தேசியப் பாடசாலையில் தனது கல்வியைத் தொடர 123 புள்ளிகளைப் பெற்ற வளங்குறைந்த, கிராமப்புற, வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள - மாணவன் ஓரளவேனும் வளமுள்ள பாடசாலை ஒன்றில் தனது கல்வியைத் தொடரமுடியாதிருப்பதே.

இது அந்த பத்து வயதுச் சிறுவனது மனத்தில் எவ்வளவு அழுத்தத்தினை ஏற்படுத்தும்.

தேசிய, மாவட்ட பாடசாலை ரீதியிலே மிகக் கூடுதலான புள்ளிகளைத் தமது பிள்ளைகள் பெறவேண்டும் என்ற நோக்கில், சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பலவந்தப்படுத்துகின்றார்கள்.

பத்து வயதிலே ஒரு சிறுவனின் சுயசிந்தனைக்கும் அறிவிற்கும், ஆற்றலுக்கும் அப்பால் வலிந்து திணிக்கப்படும் கல்வி, அப்பெற்றோர்களின் நோக்கினைச் சிலவேளைகளில் நிறைவு செய்யலாம். ஆனால், அதுமட்டுமே அச்சிறுவனது கல்வி முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்துவிடுவதில்லை.

இன்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சை (க.பொ.த. உயர்தரம்) போன்று பிரபல்யமான தேசியப் பாடசாலைகளின் புகுமுகப் பரீட்சையாக மாறியிருப்பது, வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

[illegible] களை இராணுவத்தில் சேர்க்கிறார்கள்' எனக் கூப்பாடுபோடும் அரசியல்வாதிகளும், மனிதநேய அமைப்புக்களும், அதற்குக் காரணமானதும், அதைவிட மோசமானதும் அந்தச் சிறுவர்களின் கல்வியில் காட்டப்படும் பாகுபாடுதான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நெல்லியடி, வயாவிளான், வேலணை, மத்திய மகா வித்தியாலயங்கள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு, விடுதி வசதிகளுடன் கூடிய கல்வி வளங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஒரு பாடசாலை மத்திய மகாவித்தியாலய தரத்திற்குத் தரம் உயர்த்தப்பட்டு அதற்குரிய வளங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பிரபலமான தேசிய பாடசாலைகள் தமக்குரிய புகுமுகத் தேர்வினை நடத்தி தத்தமது பாடசாலைகளின் மாணவர் அனுமதியை வரையறுத்துக் கொள்ளலாம்.

**நயினை .மு.நா.நடராசா.**

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையிலே 35 வீத புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அந்தப் பகுதியிலே உள்ள மத்திய மகா வித்தியாலயங்களிலே தமது கல்வியினைத் தொடர வழிசெய்யவேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து நடைமுறைப்படுத்துவார்களா?

'கிதியுறு செந் நெல்வாட கார்க்குலம்
கண்டு சென்றுகொதியுறு கடலில் பெய்யும்
கொள்கை போல்' அல்லாமல்

வாடினோர் முகத்தைப் பார்ப்பார்களா?

தகுதி இருந்தும் தான் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக உணரும் ஒரு 10 வயது மாணவனின் மனவேதனையையும், வசதியற்ற அவனது பெற்றோரின் துயரத்தையும் சரியாக உணரும் எவரும் இந்த அநீதியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை,
## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**"ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)**

# கேள்வி கோரல் இல.06

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ( NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இலங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/NECORD/ED/25/02 | முல்/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் 110'x25' மாடிக்கட்டட நிர்மாணம் | M6 | 57,000.00 |
| 02 | MU/NECORD/ED/26 | முல்/விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 110'x25' ஒரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீள்நிர்மாணம் | M6 | 57,000.00 |
| 03 | MU/NECORD/ED/27 | முல்/புதுக்குடியிருப்பு றோ. க. பாடசாலையில் 110'x25' ஒரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீள்நிர்மாணம் | M6 | 57,000.00 |
| 04 | MU/NECORD/HS/04 | ஒலுமடு சித்த ஆயுள்வேத மருந்தக கட்டட நிர்மாணம் | M7 | 24,000.00 |
| 05 | MU/NECORD/HS/08 | ஒட்டுசுட்டானில் மருத்துவ அதிகாரிகளுக்கான விடுதி மீள்நிர்மாணம் | M8 | 12,500.00 |
| 06 | MU/NECORD/LS/01/02 | முல்லைத்தீவு அரச மிருக வைத்தியர் விடுதி கட்டடம் நிர்மாணம் | M7 | 30,000.00 |
| 07 | MU/NECORD/ID/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் திணைக்களத் தலைவர்களுக்கான 10 அறைகொண்ட விடுதி அமைத்தல் | M6 | 83,500.00 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் ( ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் ( NCCASL) உறுப்பினராக (ICTADடுடன் மேற்படி M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.
   III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது 01.07.2003 இற்கு பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தகாரர் திருப்திகரமான ஒத்ததன்மையினால் வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவே அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ செய்திருத்தல்வேண்டும். முழுவேலைகளும் வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன், அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
   VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003 இற்கு பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தகாரர்கள் ஒத்த தன்மையிலான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ முடித்திருந்தால் எந்த ஒரு நேரத்திலும் ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு NECORD திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஒக்ரோபர் 06 ஆம் திகதியிலிருந்து 2004 ஒக்ரோபர் 15 ஆம் திகதிவரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ஒவ்வோர் வேலைக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2004 ஒக்ரோபர் 19 முற்பகல் 10.00 இற்கு நடைபெறும்.
8. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.
9. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு* 2004 ஒக்ரோபர் 26 முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

**திருமதி இமெல்டா [illegible]**
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை/அரசாங்க அதிபர்.**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி37875)(34-19-44)

### சுகாதாரப் பணிப்பாளராக தெய்வேந்திரன்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் கடந்த திங்கட்கிழமை பதவியேற்றுள்ளார்.

இந்தப் பதவியை வகித்துவந்த வைத்தியகலாநிதி தா. சிவபாதம் மலேரியாத் தடுப்பு தொற்று நோயியல் ஆகிய பிரிவுகளின் பொறுப்பதிகாரியாகவும் சாவகச்சேரி சுகாதார அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்தே தெயவேந்திரன் பணிப்பாளராகப் பதவியேற்றுள்ளார். (ஐ-3-51)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 12 - 08 - 1938

உதிர்வு 30 - 09 - 2003

திருமதி
**கமலலோஜினி நடராசா**

ஆண்டுகள் ஒன்று மறைந்தாலும் என்றும்
ஆறாத நினைவுகளுடன் வாழும்....

P.நடராசா (கணவர் - இடைக்காடு)
M.சுமதி (மகள் - ஆஸ்திரேலியா)
K.முரளிதரன் (மருமகன் - ஆஸ்திரேலியா)
M.தனுஷன் (பேரன் - ஆஸ்திரேலியா)
மற்றும் சகோதர சகோதரிகள்.

(37030)(34-19-44)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஐயாத்துரை [illegible]சிங்கம்**
(தபால் ஊழியர், கொடிகாமம்)
பிறப்பு 19-11-1963 இறப்பு 13-10-2003

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஐயாத்துரை ஜெயராசசிங்கம்**
(உபதபால் அதிபர், மந்துவில்)
பிறப்பு 08-03-1959 இறப்பு 04-05-2001

23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வல்லிபுரம் ஐயாத்துரை**
பிறப்பு 01-12-1927 இறப்பு 01-12-1982

ஈன்றவள் விழிமேல் விழி காத்திருக்க
எம் செல்வங்களே உம் தந்தையை தேடி அவ்வுலகம் பறந்தனையே!
வருடங்கள் எத்தனையானாலும் நீங்கள் மூவரும்
எம்மைவிட்டு மறையமாட்டீர்கள்.


மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

அன்பு அம்மா,
உடன்பிறப்புகள்.

(37012)(34-19-44)

## ஓராண்டு பிரிவின் நினைவு

அன்னை மடியில் 06 - 09 - 1974



ஆண்டவன் மடியில் 01 - 10 - 2003

***அமரர்*** **கிறிஸ்ரியன் ஸ்ரனிஸ் ஜெயகானந்தன்**
B.A.
*(ஆசிரியர், இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை)*

உன் பிரிவின் தாக்கம் எம்
உயிரப்போடு கலந்ததையா!
அன்புக்கும் உறவுக்கும்
அரண்வகுத்து சென்றாய் ஐயா!
தென்போடு தெளிவோடு
நிலையாமை உணர வைத்தாய்!
கன்மனம்தான் கசிந்துருகக்
கலந்தாயே இறை அடியை.

[illegible]ன்புரம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

(36915)(34-19-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளை சிறப்புறக் கொண்டாட ஏற்பாடுகள்

## மகளிர் அமைப்புகள் மேற்கொள்கின்றன

கிளிநொச்சி,ஒக்.1

இரண்டாம் லெப்டினனட் மாலதியின் நினைவு நாளையும், தமிழீப் பெண்கள் எழுச்சி நாளையும் இம்முறை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரும் மகளிர் பொது அமைப்பினரும் மேற்கொண்டுவருகின்றனர்.

தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளான இம் மாதம் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் மகளிர் பிரிவினர் பங்கேற்கும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பெண்கள் எழுச்சிநாளை ஒட்டி இலவச மருத்துவமுகாம்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளன.

இதன் ஓர் அங்கமாக தியாகதீபம் திலீபன் மருத்துவப் பிரிவினரால் சிறப்பு மருத்துவப் பாசறை நடத்தப்படவுள்ளது. இன்று வெள்ளிக்கிழமை முதல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ள இந்த மருத்துவப் பாசறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் போராளிகள் கலந்துகொண்டு சிகிச்சைகளை வழங்குவார்கள்.

இன்று வவுனியா பூந்தோட்டம் இடம் பெயர்ந்தோர் முகாமிலும், நாளை சனிக்கிழமை பூநகரி வாடியடி மகாவித்தியாலயத்திலும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நெடுங்கேணியிலும் இந்த மருத்துவப் பாசறைகள் நடைபெறவுள்ளன.

பொது மருத்துவம், கண்பரிசோதனை, பற் சிகிச்சை என்பன இதன்போது மேற்கொள்ளப்படும்.

இதேவேளை -

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் எனவும், பங்குபற்றும் கழகங்கள் தமிழீழ விளையாட்டுத் துறையினருடன் தொடர்பு கொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(8)

# இடர்பாடுகளுக்கு மத்தியில் இயங்கும் முத்தையன்கட்டு கிராமிய வங்கி

ஒட்டுசுட்டான்,ஒக்.1

முத்தையன்கட்டு கிராமிய வங்கி தற்போது கூட்டுறவு தலைமைப் பணிமனையில் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் இயங்கிவருகின்றது.

தற்போது கிராமிய வங்கிக்கு சில தளபாடங்கள் வந்துசேர்ந்துள்ள நிலையில் அவற்றை பயன்படுத்துவதற்கான போதிய இடவசதி அங்கு காணப்படவில்லை. இக்கிராமிய வங்கி ஒட்டுசுட்டான் வாழ் விவசாய மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவருகின்றது.

கூடுதலான விவசாயிகள் இக்கிராமிய வங்கியில் தொடர்பு வைத்திருந்தபோதிலும் தற்போது அது வலுவிழந்த நிலையில் உள்ளது.

எனவே, இக்கிராமிய வங்கியினை மேம்படுத்தி விவசாய நடவடிக்கைகளுக்கு பேருதவி புரிய வைக்கவேண்டுமென கூட்டுறவு மேலாளர்களை விவசாயிகள் கேட்டுள்ளனர்.

(8-341)

## கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மண்டபத் திறப்பு விழா

திருவையாறு,ஒக்.1

திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் முற்றாகச் சேதமாக்கப்பட்ட இக்கட்டடமானது கிராம மக்களின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலாளர் செல்வி சுலோஜனா மற்றும் கிளிநொச்சி மாவட்ட விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(8-393)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆதரவில் நலன்பேணல் பயிற்சி


மனிதவள மேம்பாட்டுப் பகுதியுடன் இணைந்து சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கிளிநொச்சி, மல்லாவி, புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் 2ஆம் கட்ட நலன்பேணல் பயிற்சி நெறி கடந்த மாதம் நடத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியானது வாணிப நிலையங்கள், உணவகங்கள், தங்ககங்கள், அரிசி ஆலைகள், வெதுப்பகங்கள், சந்தைகள் ஆகியவற்றில் பணியாற்றும் பல்வேறுபட்ட பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் முதலுதவி, சுகாதார நடைமுறைகள், தொற்று நோய்களும் தடுப்பும், மனித உடலமைப்புச் செயற்பாடும் பாதுகாப்பும் தொடர்பாகவும் விரிவுரைகள், செய்முறைகளும் வழங்கப்பட்டதோடு, நலன்பேணல் குழுக்கள் அமைத்துச் செயற்படுவதன் அவசியமும் விளக்கப்பட்டது.

(8)

## மரநிழலிலும் தொடருவோம் கல்வியை!




கிளிநொச்சி புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயத்தில் போதிய கட்டட வசதிகள் இல்லாமையினால் மரநிழலில் இருந்து தமது கல்வியைத் தொடரும் மாணவர்களைப் படத்தில் காணலாம்.

(படம் : பரந்தன் செய்தியாளர்)

## தொடர் மழையால் நெல்விதைப்புப் பாதிப்பு

ஒட்டுசுட்டான்,ஒக்.1

தற்போது தொடர்ந்து பெய்துவரும் தொடர் மழையினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட வயல்களில் விதைப்பினை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விதைத்த நெல்வயல்களும் அழிவடையும் நிலையிலுள்ளன. கடந்த ஒருவாரமாக மழை தொடர்ந்தவண்ணம் உள்ளது. சிறுபோக நெற்செய்கையும் இல்லாதபோதும் காலபோக நெற்செய்கையும் நேரகாலத்தோடு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை கொண்டுள்ளனர்.

(8-341)

# கடற்றொழிலாளர் சமாசத்தின் பேராளர் மாநாடு சிறப்புற நடந்தது

ஒட்டுசுட்டான்,ஒக்.1

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பேராளர்கள் மாநாடு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மாநாட்டு மண்டபத்தில் கடந்தவாரம் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பணிப்பாளர் ராதாகிருஷ்ணன், கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் றங்கன் ஆகியோர் ஏற்ற, கூட்டுறவுக் கொடியினை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.மரியாம்பிள்ளை ஏற்றிவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில உரைகளை சமாசத் தலைவர் மரியராசா, மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார்.

மாநாட்டின்போது சமாசத்தின் செயற்பாடுகள், அதன் அங்கத்துவ சங்கங்களின் இன்றைய நிலை அதனை மேம்படுத்தி செயற்பாடுகளை எதிர்காலத்தில் விஸ்தரித்தல் பற்றி ஆராயப்பட்டு அதற்கான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கும் பொதுச்சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. நிகழ்வில் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (8-341)

# அழகியல் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான செயற்றிட்டம்

கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் கிளிநொச்சி அரச அதிபர் செயலகம் தமிழீழக் கல்விக் கழகம், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் பெண்கள் தமக்கான இடத்தினை தாமே தீர்மானித்தல் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கோட்டத்திலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இருந்து ஒரு ஆண் ஆசிரியரும், ஒரு பெண் ஆசிரியரும் தெரிவுசெய்யப்பட்டு கோட்டரீதியாக மூன்று சுற்று பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளன. ஒவ்வொரு பயிற்சிப் பட்டறையும் 3 நாள்கள் கொண்ட வதிவிடப் பட்டறையாக அமையும்.

இத்திட்டத்தின் முதல் சுற்றில் முதலாவது பட்டறை பூநகரிக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கடந்தமாதம் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன் ஆரம்பநிகழ்வு பூநகரி மகா வித்தியாலய அதிபர் பொன்.தில்லைநாதன் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வின் சிறப்புவிருந்தினராக பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் எஸ்.கணபதிப்பிள்ளை கலந்துகொண்டார்.

அழகியல் கலாமன்ற முதல்வர் க.விஜயசேகரன் செயற்றிட்டம் பற்றிய அறிமுக உரையினை நிகழ்த்தினார். தொடர்ந்து ஒக்ஸ்பாம் நிறுவனப் பிரதிநிதி சுரேகாவின் கருத்துரை இடம்பெற்றது.

இச்செயற்றிட்டத்தின் முதல்சுற்றின் அடுத்த பட்டறை இம்மாத முற்பகுதியில் பளைக் கோட்டத்திலும் தொடர்ந்து கண்டாவளை, கரைச்சி ஆகிய கோட்டங்களிலும் நடைபெறும் எனவும், இறுதியில் அனைவரும் இணைந்து அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவர் என்றும் அழகியல் கலாமன்ற முதல்வர் க.விஜயசேகரன் தெரிவித்தார்.

(8-405)




## நியாப் திட்டத்தின் மூலம்

# புனரமைக்கப்பட்ட மணியங்குளம் கிராமம் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது


நியாப் திட்டம் புனரமைப்புச்செய்த மணியங்குளம் கிராமம் கையளிக்கப்பட்டது. நியாப் திட்டம் Iஇன் மூலம் புனரமைப்புச்செய்யப்பட்ட மணியங்குளம் கிராமம், மக்கள் பாவனைக்காக கடந்தமாதம் 21ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

மணியங்குளம் பொதுமண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சி.இராசநாயகம் கலந்துகொண்டார்.

அரச அதிபர் தி.இராசநாயகம் பொது நோக்கு மண்டபத்தினை நாடா வெட்டித் திறந்து வைத்தார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.தனபாலசிங்கம், கமநலசேவை உதவி ஆணையாளர் சி.வ.இராசலிங்கம், நீர்ப்பாசனப் பொறியியலாளர் கந்தசாமி, கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி க.சுலோஜனி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து பொதுநோக்கு மண்டபத்தினை அரச அதிபர் மாதர் சங்கத் தலைவியிடம் கையளித்தார். கிணறுகள், வீதிகள் என்பன உள்ளூராட்சி உதவி ஆணையாளராலும் நியாப் திட்டப் பிரதித் திட்டப்பணிப்பாளரினாலும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரிடம் கையளிப்புச் செய்யப்பட்டன.

நிகழ்வில் கிராம [illegible] டப் பணியாளர்கள், [illegible] பணியாளர்கள், பல்வேறு அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். (8-381)



இரா.நடராசன் எழுதிய 'ஆயிஷா' நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் புதன் கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனிடம் இருந்து கண்டாவளைக் கோட்டக் கல்வி அலுவலர் இராஜகுலசிங்கம் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

(படம் : வசந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

05 பெட்டி (2½'x12½') கொண்ட தொலை பேசி அறைகள் (Booths) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 4590269 (37037)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கொக்குவில் (குளப்பிட்டி) வீதிச் சந்திக்கு அருகில் 18½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0112 726918 (கொழும்பு) (சி-37919)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி தினமும் விற்பனைக்கு உண்டு. மற்றும் பொதி செய்யப்பட்ட (ஐஸ்) கோழியும் விற்பனைக்கு உண்டு. மலிவுவிலையில் வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு: T.கரன், 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (36855)

## தவறிவிட்டது

¾ பவுண் நிறையுடைய கைச்சங்கிலி 29.09.2004 புதன்கிழமை யாழ். கணக்கர் சந்திக்கும் அந்தோனியார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 90, புங்கன்குளம் றோட், அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.P.: 0777 6327618 (37061)

## யாழ். நல்லூர் சிறீக்குமரன் இசைமன்றத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்

முதலாம் பரிசு 6578
இரண்டாம் பரிசு 7151
மூன்றாம் பரிசு 8535
10 ஆறுதல் பரிசுகள்
6383, 1373, 7386, 1271, 18292, 7542, 18358, 7415, 18936, 15238.

- நிர்வாகம்.

(37056) (26-19-44-24)

## கடை வாடகைக்கு

இல.136, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கடையும் அதனுடன் சேர்ந்த வீடும் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.துரைராஜா (மிருதங்க வித்துவான்), No.12, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். (37009)

## மணமகள் தேவை

யாழ். இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973 இல் பிறந்த, விசாக நட்சத்திரம், கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய Electronic Designer ஆகக் கடமையாற்றும் மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. தொலைபேசி இலக்கம், குறிப்பு ஆகியவற்றை அனுப்பவும். மே/பா விளம்பர இலக்கம்: 2394. (36960)

## மாதாந்த இசை நிகழ்வு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாதாந்த இசை நிகழ்வு இன்று மாலை 5மணிக்கு ஆதீனக் கலாமண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், சோ.குமுதாவின் வீணை இசையும், கே.இராமநாதனின் பாட்டுக் கச்சேரியும் நடைபெறவுள்ளன.

(ஐ-204)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenace and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.
**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna
Phone: 0773 068968
(சி-37511)

## சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம், தமிழ் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் நடத்தும் உலக சிறுவர் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லை திருஞானசம் பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர்களை வரவேற்பதைத் தொடர்ந்து, சிறப்புரைகள், சிறுவர்களின் இசையும் அசைவும், சிறுவர்களைக் கௌரவித்தல் என்பன இடம்பெறவுள்ளன.

(ஐ-204)

## கூட்டுறவுப் பணியாளர்கள் சிரமதானம்

அரியாலை,ஒக்.1

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபைப் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து பெரும் சிரமதான நிகழ்வு ஒன்றைக் கடந்த திங்கட்கிழமை நடத்தினார்கள்.

கூட்டுறவுச் சபை அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகிலுள்ள சபைக்குச் சொந்தமான காணியில் இந்தச் சிரமதானப் பணி இடம்பெற்றது.

இந்தக் காணியில் படர்ந்து வளர்ந்திருந்த பற்றைகள் சிரமதானம் மூலம் வெட்டியழிக்கப்பட்டது.

(ஐ-17)

## அடகு நகைகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,ஒக்.1

மக்கள் வங்கியின் யாழ். பிரதான வீதி, நெல்லியடி ஆகிய கிளைகளில் கடந்த வருடம் ஜூலை மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அடகுவைத்து மீட்கப்படாத தங்கநகைகள் நாளை சனிக்கிழமை ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

மக்கள் வங்கியின் - யாழ்ப்பாணம், வன்னிப் பிராந்திய முகாமையாளர் இதனை அறிவித்துள்ளார். (ஐ-204)

## ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை
## தரம் 6 -(2005) அனுமதி

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2004.10.30 ஆம் திகதிக்கு முன்பாகக் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

2004.09.30 (சி-37928) (24-18-45) அதிபர்.

## பாராட்டுகின்றோம்



புற்றுநோயின் கோரப்பசிக்கு இலக்கான தாயார் இரத்தினாவதியின் அபிலாசையை நிறைவேற்றும் வகையில் கடந்த 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகள் எடுத்துச் சித்தியடைந்த

**க.யதுஷனுக்கு**

ஊக்கமளித்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். அத்தோடு, **யதுஷன்** மேலும் பல வெற்றிகள் பெறக் கருங்காலி முருகனையும் வேம்படிப் பிள்ளையாரையும் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
K.கனகலிங்கம்,
62/8, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.
(37063) (26-18-45-24)

பாராட்டுபவர்கள்:
தந்தை K.கனகலிங்கம்,
சித்தி, தம்பிமார்,
பெரியப்பாமார் மற்றும்
நடராசா குடும்பத்தினர்.

# ஓராம் ஆண்டில் ஓரிரும் நினைவுகள்



**அமரர் அப்புக்குட்டி உதயசீலன் (அப்பன்)**

மண்ணில் 18.09.1962 — விண்ணில் 12.10.2003

திதி : துதியை

வாழ்வியலின் தத்துவத்தை வளமாகவே வகுத்து
தாழ்வின்றி வாழவைத்த தனித்துவத்தை என்னென்பேன்
(மனைவி)

கண்ணின் கருமணியாய் காலமெல்லாம் காப்பீரென
மண்ணில் மலர்ந்த எமை மறந்துதான் போனீரோ?
(பிள்ளைகள்)

இன்று (01.10.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'கணேஸ்வரம்'
அளவெட்டி கிழக்கு,
T.P.: 021 222 5695
06022-3510

உம் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

(37058)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் சுருக்கங்கள் விழ வேண்டாம்...!

## இன்று முதியோர் தினம்

வானத்தில் இரண்டு தீபங்கள். ஒன்று சூரியன், மற்றையது சந்திரன். இவைகள் இல்லாவிட்டால் உலகம் இயங்காது. இதேபோல மனிதவாழ்விலும் இரண்டு தீபங்கள் அந்தத் தீபங்கள் போல இருப்பவர்கள் தாயும் தந்தையும். இவர்கள் இல்லாவிட்டால் வாழ்வில் ஒளி இல்லை. அன்புக்கு ஆதாரம் தாய். அறிவுக்கு ஆதாரம் தந்தை. எம்மைப் பெற்று வளர்த்து அன்பையும் அறிவையும் ஊட்டி, சமுதாயத்தில் நல்ல முறையில் வாழ்வாங்கு வாழ வழி சமைத்துத் தந்த அன்புத் தெய்வங்களான பெற்றோரை அவர்களின் முதுமைக் காலத்தில் ஒதுக்கிவிடலாமா? ஆயிரம் உறவுகள் எமது இளம் பிராயத்தில் எம்மை நாடி வந்திருக்கலாம். ஆனால், தாயாகி, தந்தையாகி, அவர்களால் எம்மைத் தாங்க முடியுமா?

முதுமைப் பிராயம் அன்புக்காக ஏங்குகின்ற பருவம் ஆகும். அன்பு பாராட்ட ஒருசிலர் இருந்தாலே போதும் அப்பொழுது முதியவர்கள் தெம்புடன் வாழ்வார்கள். முதியவர்கள் 'தீண்டத்தகாதவர்கள், இல்லங்களை அசுத்தப்படுத்தி விடுவார்கள், தமது இல்லங்களுக்கு வரும் உறவினர்களுக்கு - விருந்தினர்களுக்கு - நண்பர்களுக்கு முன்னே வருவது அநாகரிகம் என்றெல்லாம் எண்ணி, அவர்களை வீட்டின் கோடிப் புறங்களில் ஒதுக்கிவைக்கிறார்கள் பலர். இது மனிதப் பண்பாட்டுக்கு ஏற்புடையதன்று.

ஒருகாலத்தில் ஒரே வீட்டில் ஒருங்கே வாழ்ந்தவர்கள் தத்தமக்கெனத் தொழில்வாய்ப்புகளையும் வாழ்க்கைத் துணைகளையும் தேடிக்கொண்டு பிரிந்து வெளியேறியவுடன் ஒரு விரக்தியும் வெறுமையும் முதியோரின் வாழ்வில் ஏற்பட்டுவிடுகின்றன. வெறுங்கூட்டில் தனித்திருக்கும் முதுமைப் பறவைகள் போல எம்மத்தியில் முதியவர்கள் பலர் தனித்திருக்கிறார்கள். தனிமையே முதுமையின் முதல் எதிரி என்றார் அமெரிக்க அறிஞர் ஒருவர். யுத்தகாலச் சூழ்நிலையையும் ஒருகாரணமாகக் காட்டித் தமது பெற்றோரை முதுமைப் பருவத்தில் தவிக்கவிட்டு விட்டு வெளிநாடு செல்லுகிறார்கள் சிலர். அவர்கள் பணம், அனுப்பினால் போதும் என்று கருதுகிறார்கள். ஆனால், கோடி கோடியாகப் பணம் காலடியில் கொட்டிக் கிடந்தாலும் அவர்கள் மீது கருணை காட்டி, பாசக்கரம் நீட்டி, அரவணைக்க எவருமே இல்லாத துன்பநிலையில் உக்கிப்போய் மண்ணுக்கே உரமாகிறார்கள். அம்முதியவர்கள் இறந்தபின்னர் ஊரெல்லாம் கூட்டி, ஒப்பாரி வைத்து, ஆடம்பரமாக மரணச்சடங்குகளைச் செய்து, வீடியோப் படம் எடுத்து, 'பாண்ட்' வாத்தியம் முழங்க ஊர்வலமாக மயானத்துக்குக் கொண்டு செல்லுகிறார்கள். இவற்றைச் செய்வதைவிட அவர்கள் உயிருடன் இருக்கும் போது அவர்களை அன்புடன் ஆதரித்தல் பெரும் பேறல்லவா? இது நன்றிமறவாத செயலுமாகும்.



இன்னும் சில இடங்களில் பிள்ளைகள், பெற்றோரையும் வெளிநாட்டுக்குத் தம்முடன் அழைத்துச்செல்லுகிறார்கள். அங்கு சென்ற முதியவர்கள் படும்பாட்டைச் சொல்லவே முடியாது நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு இன்னலுறும் அவலநிலை, மொழிப்பிரச்சினை, ஒவ்வாத காலநிலை, பேரப்பிள்ளைகளின் அலட்சியப் போக்கு. வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள், பேரன் பேர்த்தியரோடு ஒன்றிவாழ முடியாத இக்கட்டான நிலை, பிள்ளைகளின் நடையுடைபாவனை முதலான பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கமுடியாமல் மன அமைதியற்ற நிலை, இவைகள் காரணமாக முதியவர்கள் ஊசலாடிக்கொண்டிருக்கிறார்கள்.

முதியவர்கள் தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரிலேயே தமது காலத்தைக் கழிக்க விரும்புவார்கள். நாம் இந்த நிலையை மாற்றும்போது அவர்கள் மனம் தளர்ந்து சோர்ந்து விடுவார்கள். ஆகவே, இயன்றவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற நாம் முன்வரவேண்டும். முதியவர்களின் நெற்றியில் சுருக்கங்கள் வருவதை எம்மால் தடுத்துவிடமுடியாது. ஆனால், அவர்களின் நெஞ்சங்களில் சுருக்கம் ஏற்படுவதை எமது அன்பாலும்ஆதரவாலும்அரவணைப்பாலும் தடுத்துவிடமுடியும். அன்பு, ஆதரவு என்ற மனித நேயங்களைத் தூககி எறிந்துவிட்டு அவர்கள் தொல்லை தருபவர்கள் என்றும் கிழடுகள், நைன்ரிகள், அறளைகள், பழசுகள் என்றும் அவர்களுடன் கதைப்பதே பெருந்தொல்லை என்றும் ஏளனஞ்செய்யும் நிலை இக்காலத்திலே வேகமாகப் பரவிவருகிறது.

"காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்" என்பது பழமொழி. தமக்கும் ஒரு காலகட்டத்தில் முதுமை ஏற்படும் என்பதை அவர்கள் சிறிதும் எண்ணுவதில்லை.

முதியவர்களுக்குப் பணிவிடை செய்வதும், பராமரிப்பதும் பெரிய சுமை என்று பலர் எண்ணி அவர்களைத் துடிக்கவிடுகிறார்கள் கங்கையில மூழ்கலாம், காவிரியில் நீராடலாம், தானதருமங்கள் செய்யலாம், தலயாத்திரை செய்யலாம் முதியவர்களைத் துடிக்க விட்டுவிட்டு இறைவனைக் காணமுடியுமா? 'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா? முதியவர்களுக்குக் கண்ணியம் அளிக்கும் இளைஞர்களுக்கு அந்த இளைஞர்களின் வயோதிபப் பருவத்திலே அவர்களுக்கு மரியாதை செய்பவர்களைக் கடவுள் நியமிப்பார் என்று நபிகள் நாயகம் கூறியிருப்பதை நாமெல்லோரும் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். ★

செல்வி இராணி வைத்தீசுவரக்குருக்கள்.
காரைநகர்.

## பெற்றோரும் முதியவர்தான் பெருமை சேர்த்தவரும் முதியவர்தான்

முதியோர் இல்லங்களில் முடங்கித் தவமிருக்கும் பெற்றோர்கள்
வதிவிடமில்லா ஏழைஎளியவர் இல்லையப்பா - இவர்கள்
வாழ்வகத்தில் தொல்லை என்று தம்முணர்விற்குத் தடைபோட்டு
தாழ்வைத் தத்தெடுக்கும் அபலை நிலை நெஞ்சைக் குடைகிறது!

பெற்றோரைத் தொல்லை என்று பாசத்திற்கு எல்லையிட்டு
சிற்றறிவாளராய்த் தம்மை இனம் காட்டிக் கொள்பவர்கள்
முற்றத்து மல்லிகையாய் மணம்பரப்பும் குடும்ப விளக்கதனை
சற்றேனும் மதியாது தூரவிலக்குதல் முறையாமோ!

பெற்றோர்கள் தாம் பெற்றெடுத்த தம் பிள்ளையினை
கற்றோனாய் ஆக்குதற்கு கண்விழித்த நாள்கள்தான் எத்தனை
பற்றோடும் பாசத்தோடும் எம்மைத் தாலாட்டி வளர்த்த பெற்றோரை
பிற்காலம் பேணுதல் பெரும் கடன் அன்றோ!

பெற்றோரை சிறைவைத்து பெருமைகள் சேர்த்து வைத்து
சுற்றம் போற்றும் சுகவாழ்வு பயன் தருமா?
முன்வந்த செவியை பின்வந்த கொம்பு மறைப்பது போல
பின்வந்தவரால் பாசத்திற்கு வேலி போடுதல் முறையாமோ!

பெற்றோரும் முதியவர்தான் பெருமைகள் சேர்த்தவரும் முதியவர்தான்
சொற்போராய் மாறிவரும் பெரியோரை மதியாமை என்ற விடயமதை
உற்று நோக்காது கண்ணியவான்களாய் பவனிவரும் பெருமனிதர் பலர்...
வற்றிய வரட்டுக் கௌரவத்தோடு வலம்வருதல் வேதனையன்றோ!

முதியோரே கண்கண்ட தெய்வமென்ற முனைப்போடு செயல்பட்டு
பதியும் நினைவோடு பணிகள் தொடர்ந்திட்டால்
இதயத்தில் இன்பம் சுரக்கும் எண்ணம் தெளிவோடு சிரிக்கும்
உதயமாகும் உணர்வுகளில் புதுத் தெம்பு பிறக்கும்.

-வ.ச.செல்வராசா.

# உள்ளூர் அதிகாரிகளின் சிபார்சைப் பெறாமலேயே மது நிலையங்களுக்கு கொழும்பிலிருந்து அனுமதி

## முறையற்ற நடவடிக்கை அம்பலத்துக்கு வருகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.1

குடாநாட்டில் முறையற்ற விதத்தில் இயங்கும் சகல மதுபான விற்பனை நிலையங்களுக்கும் எதிராகத் துரிதமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி கலால் திணைக்களத் திடமும் பொலீஸாரிடமும் கோரவேண்டும்.

யாழ். அரச அதிபரிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்திருக்கின்றது மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம்.

அமையத்தின் இணைப்பாளர் சி.வி.கே.சிவஞானம் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் குற்றத்தடுப்புத் தொடர்பாக 01.06.2004ஆம் திகதி தங்கள் பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடல் அறிக்கையின் 5ஆவது பந்திக்குத் தங்கள் அவதானத்தைக் கோரவிரும்புகிறேன்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த கலால் திணைக்கள உதவி ஆணையாளர் தமது சிபார்சினைப் பெறாமல், வழமையான நடைமுறைகளுக்கு முரணாகத் தமது தலைமையகம் ஒருதலைப்பட்சமாக மது விற்பனை நிலையங்களுக்கு நேரடியாக அங்கீகாரம் வழங்குவதாகத் தெரிவித்தார். இந்தத் தகவல் மிகவும் அதிர்ச்சியூட்டுவதாகவுள்ளது.

எமது மண்ணின் கலாசாரத்தைச் சீரழிக்கும் மறைமுக சதி நடவடிக்கையாகவே இவற்றை நாம் பார்க்கிறோம். அண்மைக்காலங்களில் யாழ். மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவை எனக் கூறப்படும் மதுபான நிலையங்களும் அங்கத்தவர் கழகங்கள் (Clubs) என்ற பெயரில் மதுபான விற்பனை நிலையங்களும் பரவலாகப் பெருகி வருவதை நாம் மிகக் கவலையுடன் காண்கிறோம். மதுப் பழக்கம் அதிகரிப்பதால் குடும்பப் பிரச்சினைகளும், களவு, கொள்ளை, தனிநபர் மற்றும் குழு மோதல்கள், வன்முறைகள், பாலியல் வன்முறைகள், விபத்துக்கள் போன்றன பல சமூகவிரோதச் செயல்களுக்கும் கலாசார சீரழிவுகளுக்கும் வழிவகுப்பது கண்கூடு.

பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள், பொது நிறுவனங்களுக்கு அண்மித்ததாக மதுபான விற்பனை நிலையங்கள் அமைக்க அனுமதிக்கப்படமுடியாது என்ற சாதாரண விதிமுறைக்கு மாறாக - அங்கீகரிக்கப்பட்டோ - அல்லது அங்கீகரிக்கப்படாமலோ - இயங்குவது வெளிப்படையான விடயமாகும்.

எனவே, முறையற்ற விதத்தில் இயங்கும் சகல மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராகக் கடுமையான துரித நடவடிக்கை எடுக்குமாறு கலால் திணைக்களத்தையும் பொலீஸ் பகுதியினரையும் கோருமாறு தங்களை வேண்டுகிறோம்.

மேலும் நெறிமுறைகளுக்கு முரணாகவும், பொலீஸ் மற்றும் கலால் திணைக்கள அனுமதிகளின்றியும் [illegible] - கலால் திணைக்கள தலைமையகத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மதுபான நிலையங்களின் விவரங்களை எமக்கு வழங்கியுதவுமாறு தங்களையும் கலால் திணைக்களத்தையும் வேண்டுகிறோம்.

எமது கலாசாரத்தைச் சீரழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கையில் எங்கிருந்தோ செயற்படுவோரை மக்கள் மன்றத்தில் இனங்காட்ட இது உதவும்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குச்சந்தை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.1

வரையறுத்த ஹற்றன் நஷனல் வங்கியின் பங்குத்தரகர் (தனியார்) நிறுவனமும், ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து நடத்தும் பங்குச் சந்தை பற்றிய கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு யாழ்ப்பாணம்-மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழகத்தில் நடைபெறவுள்ளது.

நுகர்வோர் வங்கிப் பிரிவு சிரேஷ்ட முகாமையாளர் பிறேமராஜா "நுகர்வோர் வங்கிச்சேவை" பற்றியும், கொழும்பு பங்குச் சந்தையின் யாழ். கிளை முகாமையாளர் தி.ஷிவானி பங்குச் சந்தை பற்றிய அறிமுகத்தையும் வழங்கவுள்ளனர்.

ஹற்றன் நஷனல் வங்கியின் பங்குத் தரகர் நிறுவன [illegible] முகாமையாளர் ஹசித்த [illegible] முதலீட்டுத் தீர்மானங்களை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றிக் கருத்துரை நிகழ்த்துவார். (ஐ-204)

## சேவை முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அதிகாரம்பெற்ற சேவை முகவரான சந்நிதி முருகன வேக்சொப் அன் சேவிஸ் நிறுவனத்தினரால் பஜாஜ், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்களுக்கான சேவை முகாம், இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இரு தினங்கள் நடத்தப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பஜாஜ் முச்சக்கர வண்டிகளுக்கும் நாளை சனிக்கிழமை மோட்டார் சைக்கிள்களுக்கும் இச்சேவைமுகாம் நடத்தப்படவுள்ளது.

இந்த முகாமில், பஜாஜ் மோட்டார் சைக்கிள், பஜாஜ் முச்சக்கரவண்டிகள் ஆகியவற்றை இலவசமாகப் பரீட்சித்துக்கொள்ளமுடியும்.

அத்தோடு, உதிரிப்பாகங்களை விசேட கழிவுவிலையில் பெற்றுக்கொள்வதுடன், டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் விசேட தொழில்நுட்ப அலுவலர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-204)

## தொழில்நுட்பப் பூங்கா இடம்மாற்றம்

அரியாலை,ஒக்.1

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடுவப்பணிமனைக் கட்டடத் தொகுதியில் இயங்கிவந்த விலைமதிப்பீட்டுத் திணைக்களம் யாழ். செயலகப் பகுதிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

யாழ். செயலகப் பகுதியில் இயங்கிவந்த தகவல் தொழில்நுட்பப் பூங்கா, சங்கத்தின் நடுவப்பணிமனைக் கட்டடத்தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. (ஐ-17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வரணி, இடைக்குறிச்சி பாலசுந்தரம் - ஆனந்தமகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும், இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய மாணவியுமான

**செல்வி ஞானநிவாஜினி**

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வழி நடத்திய அதிபர் திரு. சு. தர்மலிங்கம் அவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் பெரிதும் போற்றிப் பாராட்டுகின்றோம்.

வாரித்தம்பி குடும்பத்தினர்,
துரைராசா குடும்பத்தினர்.

(37069)(43-12-15)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 12 - 05 - 1953



ஆண்டவன் அடியில் 28 - 09 - 1999

**அமரர் அம்பலவாணர் சோதிலிங்கம்**

(கஜமுகா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்- வெற்றிலைக்கடை சோதி)

திதி:-01.10.2004

ஆறாது எம் துயரம்
ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும் - அப்பா
தேறாது எமதுள்ளம்
திரும்பவும் உங்களைக் காணும்வரை - அப்பா
கண்ணீரில் கரையுது அப்பா காலம்
கண்கள் உங்களைக் காணவெனத் துடிக்குது - அப்பா!

உங்கள் பிரிவால் கலங்கி நிற்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

*33, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.* (37074)(33-12-15-43)

## 2005 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி, தினக்குறிப்பு அச்சிட்டு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

நாட்காட்டி (கலண்டர்)
[illegible] 00
[illegible] : பொக்ஸ்போட்
அளவு 44cm x 30cm
வர்ணம்: நான்கு

அத்தோடு எம்மால் தரப்படும் படம், சங்கங்களின் பெயர் என்பன பொறிக்கப்படல் வேண்டும் (லெமனேற்றிங்).

**கலண்டர் கீழ்ப்பகுதி**
தாள் - 70 கிராம் பாங்க் பேப்பர்
அளவு - 44cm x 30cm
வர்ணம் - இரண்டு
தாள்களின் தொகை - 12 [illegible]

அத்தோடு வாக்கிய பஞ்சாங்கமும் [illegible] கிறிஸ்தவ பெருநாள்கள் மற்றும் விளம்பரங்கள் [illegible] பனவும் இடம்பெறுதல் வேண்டும். 12 தாள்கள் கொண்ட நாட்காட்டியின் மேற்புறத்தில் பொக்ஸ் போட்டில் அச்சிடப்பட்ட அட்டை ஒன்று இணைக்கப்பட்டு மட்டையின் மேற்புறத்தில் பித்தளைத் தகட்டினாலான கிளிப் போடப்பட வேண்டும்.

**நாட்குறிப்பு (டயறி)**
சாதாரண டயறி 600 அளவு 1/8
மனேஜ்மென்ற் டயறி 30 அளவு 1/5
தாள் - பாங்க்பேப்பர் 80 கிராம்
கவர் - பிளாஸ்ரிக்கவர்

மேற்குறிப்பிட்ட விவரத்திற்கு அமைய 20 பக்கங்களில் சங்கங்களின் பொதுவான விவரங்கள் அச்சிடப்பட்டு டயறிகளின் மேல் பக்கத்தில் இணைத்து பைன்டிங் செய்தல் வேண்டும். அத்தோடு டயறிகளின் மேல் பிளாஸ்ரிக் அட்டையில் எம்மால் தரப்படும் சங்கங்களின் பெயர்கள் பொறிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு:- மேற்படி இரு விடயங்களும் அச்சிட்டு வழங்குவதற்கான இறுதித்திகதி: 15.11.2004 ஆகும்.

மேற்படி அச்சிடல் சம்பந்தமான தேவையான விவரங்களையும் விளக்கங்களையும் மாதிரிகளையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 2,500/= செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 08.10.2004 ஆம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இவ்விண்ணப்பங்கள் அன்றைய தினமே விண்ணப்பதாரர் முன்னிலையில் திறக்கப்பட்டு ஆராயப்படும்.

மேற்படி விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ, நேரிலோ பொது முகாமையாளர் வடமாகாண பனை தென்னை வள அபி. கூ. ச. சமாசம், இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*வடமாகாண பனை தென்னை வள அபி.கூ.ச.சமாசம்.* - பொதுமுகாமையாளர்.

(சி-37935)(43-12-15)

## கழிவுகள் கொட்டுவதற்கு இடம் ஒதுக்கீடு

கோப்பாய்,ஒக்.1

கோப்பாய் தரவைப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதற்காகக் குறித்த பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு அடையாளப் பலகைகள் நாட்டப்படவுள்ளன.

எதிர்வரும் காலங்களில் கழிவுகளைக் கொட்டுபவர்கள் குறித்த இடங்களில் கழிவுகளைக் கொட்டுமாறும் தவறின் தண்டப்பணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கோப்பாய் பிரதேச சூழல் பாதுகாப்புக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

தற்போது வலிகாமத்தின் பல பிரதேசங்களிலிருந்தும் மற்றும் தென்மராட்சியின் பகுதிகளிலிருந்தும் கழிவுப் பொருள்களை ஏற்றிய லொறிகள் இப்பகுதிகளில் கண்டபடி குப்பைகளைக் கொட்டிவிட்டுச் செல்வதால் இப்பகுதியல் துர்நாற்றம் வீசுவதுடன், தோட்ட வயல் நிலங்களும் மாசடைந்துள்ளன.

இப்பகுதியிலுள்ள சுடுகாட்டுக்கு இறுக்கிரியைகள் மேற்கொள்ள செல்பவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (8-72)

## முதியோர் கௌரவிப்பு

கொழும்புத்துறை,ஒக்.1

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் அப்பகுதியில் உள்ள முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகமும் சிறப்பு விருந்தினராக கிராம அலுவலர் இசண்முகநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-30)

## கிளிநொச்சியில் ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

கிளிநொச்சிப் பிரதேசத்தில் 'சம்ரெக்' ஆதரவில் இலவச ஆங்கில நேரடி வகுப்புகள் நாளை சனிக்கிழமை காலை 9மணி முதல் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலை 9மணி தொடக்கம் 11 மணி வரை ஒரு பிரிவாகவும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3மணி வரை ஒரு பிரிவாகவும் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இந்த வகுப்பில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் சான்றிதழகளும் வழங்கப்படவுள்ளன. (3-204)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
நியூசோதி நகையகம்,
சுன்னாகம். (36506)

வரையறுத்த HNB பங்கு தரகர் (குனியார்) நிறுவனமும் HNB வங்கியும் இணைந்து நடத்தும்

**மாபெரும் பங்குச் சந்தை பற்றிய கருத்தரங்கு**

திகதி :- October 01
காலம் :- 3.00 (பிற்பகல்)
இடம் :- யாழ்ப்பாணம் வணிகர் கழகம், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**வரவேற்புரை**
செ.வசந்தகுமார்.
(முதலீட்டு ஆலோசகர்/பங்குத்தரகர் HNB பங்குத்தரகர் நிறுவனம்)

**நுகர்வோர் வங்கி சேவை**
பிறேமராஜா
(சிரேஷ்ட முகாமையாளர், நுகர்வோர் வங்கிப்பிரிவு)

**பங்குச் சந்தை பற்றிய அறிமுகம்**
சிவானி திருஞானசம்பந்தன்
(முகாமையாளர் கொழும்புப் பங்குச் சந்தை, யாழ். கிளை)

**முதலீட்டுத் தீர்மானங்களை எவ்வாறு மேற்கொள்வது**
ஹசித்த பிறேமரட்னே
(முகாமையாளர், ஆராச்சி HNB பங்குத்தரகர் நிறுவனம்)

**வினா நேரம்**

**நன்றியுரை**
விராச் மாலவின
([illegible] முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி HNB பங்கு தரகர் நிறுவனம்)
(சி-37933)(43-12-15)

## பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்



செல்வி

**மஞ்சுளாதேவி தனபாலன்**

அவர்கள் 01.09.2004 இல் இருந்து உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராகப் (ADS) பதவி பெற்றதையிட்டு, பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று சேவைசெய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

2001/2003
வர்த்தக ஆசிரியர்கள்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

(C/37942)(22-12-15)

## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் கணக்காளர் அம்பலவாணபிள்ளை வாகீசன் அவர்களின் அன்புத் தந்தையார்

**அம்பலவாணபிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*140,பலாலி வீதி, திருநெல்வேலி.*
(37073)(15-12-43)

எம்.இராஜநாயகம் அன் கம்பனி
பட்டயக் கணக்காளர்கள்,
நிறுவனப் பங்காளரும் பணியாளர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை வனஜா அவர்களின் அன்புத் தந்தை

**அம்பலவாணபிள்ளை**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ஊரி அ.மி.த.க.வித்தியாலயம், காரைநகர்.

(37076)(12-15-43)

## இதயத்தின் நீங்கா ஈராண்டு நினைவலைகள்

மண்ணின் மைந்தனாய் 06 - 03 - 1943



விண்ணின் நாயகனாய் 24 - 09 - 2002

அமரர் **வைத்திலிங்கம் கதிரவேலு**

திதி:- திருதியை

அன்போடும் பண்போடும் வாழ்ந்தீர்கள்
ஆதரவாய் அரவணைத்து மகிழ்ந்தீர்கள்
இன்றோடு ஈராண்டுகள் மறைந்தே போனாலும்
இதயத்தில் உங்கள் நினைவு இணைந்தே இருக்கும்.

ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.

*கரந்தன், நீர்வேலி.* (37070)(43-12-15)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2873591 இலிருந்து 2889570 வரை

சீட்டிழுப்பு இல. 1543
திகதி 29.09.2004

**வெற்றி எண்கள்**
**08 14 24 33 43**

போனஸ் எண் **50**

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 15,00,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 3 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 | 104 | 10,000/- | 10,40,000/- |
| 3 | 5,036 | 500/- | 25,18,000/- |
| 2 | 84,072 | 20/- | 16,81,440/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 08ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,03,513 | 10/- | 10,35,130/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 70,74,570/-

**Rs. 22,98,900/-**

தொடர் இல. 3821541 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 02 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2876503-3-46
2874871-2-08
2879927-1-12
2883742-5-24
2877762-6-02

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக அறநெறி ஆசிரியர்களுக்கு ஊர்காவற்றுறையில் செயலமர்வு

## சனி, ஞாயிறு தினங்களில் நடக்கும்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் ஏற்பாட்டில் தீவகம் வடக்கு ஊர்கா வற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின அனுசரணையுடன் நடத்தப்படும் தீவுப் பகுதி யைச் சேர்ந்த இந்து அறநெறிப் பாடசாலை களின் ஆசிரியர்களுக்கான வருடாந்த வதிவி டச் செயலமர்வு நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் ஊர் காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை யின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் கமரீமோகனன் தலைமையில் நடை பெறவுள்ள இந்தச் செயலமர்வில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை, காரைநகர் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர் கலந்து கொள்வர்.

முதலாம் நாள் செயலமர்வு நாளை சனிக் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். இதில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத் தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் வாழ்த்துரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து இளைப்பாறிய அதிபர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை "அறு வகைச் சமயங்களின் பிரதான அம்சங்கள்", "சைவசித்தாந்தத்தின் அடிப்படை அம்சங்கள்" என்ற தலைப்புகளிலும் யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் முதல்வர் செல்வி அகந்தையா " இந்து சமய விரதங்கள், பண்டிகை கள், விழாக்கள்" என்ற தலைப்பிலும் -

உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் "பண் ணிசை, திருமுறைகளின் முக்கியத்துவம், சமய குரவர்கள்", "நீதி நூல்கள் கூறும் அறக் கருத் துக்கள்" என்ற தலைப்புக்களிலும் கருத்துரை நிகழ்த்துவர்.

இரண்டாம் நாள் செயலமர்வில் இளைப் பாறிய அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரை "கிரியைகள் சடங்குகளின் விளக்கம்" என்ற தலைப்பிலும் வலிகாம வலய ஆசிரிய ஆலோ சகர் சைவப்புலவர் கநத சத்தியதாசன் "இலங் கையில் சைவம்வளர்த்த பெரியோர்", "அற நெறிக்கல்வி கற்பித் தல் முறைகள்" என்ற தலைப்புக்களிலும் கருத்துரை வழங்குவர்.

இந்தச் செயலமர் வில் அறநெறிபாடசா லைகளுக்கான நூற் தொகுதிகள் வழங் கப்படவுள்ளன.

(எ)

# உலக சிறுவர் நாளை ஒட்டி கிளிநொச்சியில் விளையாட்டு விழா

கிளிநொச்சி,ஒக்.1

உலக சிறுவர் நாளை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் இல்லங்களிற்கான புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான நிறுவ கம் தமிழீழ விளையாட்டுத்துறையின் ஒழுங்க மைப்புடன் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழாவும், தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறப்பு வெளியீடான "உதிக்கும் திசையில் சிரிக்கும் மலர்கள்" காண் ஒளிப்பேழை தொகுப்பு வெளி யீட்டு நிகழ்வும் இன்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள் ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பராமரிக்கப் பெற்று வரும், சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் சிறார் களும், ஏனைய சிறுவர் இல்லங்களின் சிறார்க ளும் இணைந்து இவ்விளையாட்டு விழாவில் பங்குகொள்கின்றனர். இதனைத் தொடர்ந்து "உதிக்கும் திசையில் சிரிக்கும் மலர்கள்" காண் ஒளிப்பேழை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

உறவிழந்த சிறார்களின் உள்ளத்து உணர்வு களினைச் சுமந்துவரும் இககாண் ஒளிப்பேழை யினை T.T.N. நிறுவன அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக்கழம் தயாரித்து வெளியிடு கின்றது.

வேலணையூர் சுரேஸின் எழுத்துருவாக் கத்தில் உருவான "உதிக்கும் திசையில் சிரிக் கும் மலர்கள்" காண் ஒளிப்பேழை விவரணத் திற்கான படப்பிடிப்பினை புனிதன், குமணன் ஆகியோரும் படத் தொகுப்புத் தொழில் நுட்பத்தினை மயூர னும், நிர்வாகத் தினை சதீஸ்"ம் மேற்கொண்டதுடன், ஒலிப் பதிவு உதவியினை புலிகளின் குரல் நிறுவ னமும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கவை.

இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறும் இந்த விளையாட்டு விழாவில் பல்வேறு விளை யாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

(3)

## நெடுந்தீவில் நல்லொழுக்கதின நிகழ்வு

நெடுந்தீவு,ஒக்.1

உலக சிறுவர் நல்லொழுக்க, ஆசிரியர் தின விழா இரு தினங்கள் நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நெடுந்தீவு மத்தி தென்னிந்திய திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலையத்திலும் நாளைமறு தினம் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு மேற்கு தென்னிந்திய திருச்சபை பகல் பராமரிப்பு நிலை யத்திலும் இந்த நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு தென்னிந்தியத் திருச்சபை யின் வண.போதகர் ஜோண் செல்வா தலைமை வகிப்பார்.

(எ-7-112)

## பொருண்மிய மதியுரையகத்தின் இலவச கணனிப் பயிற்சி இன்று ஆரம்பம்

பரந்தன்,ஒக்.1

பொருண்மிய மதியுரையகத்தினால் நடத் தப்படவிருக்கும் இலவச கணனிப் பயிற்சிநெறி முல்லை மாவட்ட. ஒட்டுசுட்டான் பொருண்மிய மதியுரையக செயலகத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றது.

4 மாதகாலப் பயிற்சியாக இப்பயிற்சி அமை யும் எனவும் 60 பயிற்சியாளர்கள் இதில் கலந்து கொள்கின்றனர் எனவும் பொருண்மிய மதியுரை யகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரி வித்தார்.

(4-341)


சேவை நிறைவில் எமது வாழ்த்துக்கள்

திருமதி இலஷ்மிதேவி குணரட்ணம்

சேவைக்காலம்: 05.06.1975 - 01.10.2004

இரண்டாம் மொழியாம் ஆங்கிலத்தை
இங்கிதமாய்க் கற்பித்து
நிமிர்ந்த நல்ல நடையுடனே
விளையாட்டரங்கின் பொறுப்பாயும் – தம்
பணிதொடர் காலம் முழுவதுமே
பாங்காய்க் கடமை புரிந்து – இன்று
பணியினின்றும் ஓய்வுபெறும்
மங்கை நல்லாள் – இலக்குமியார்
நலன்கள் பலவும் பெற்றுமே
நீடு காலம் வாழ்க – என
நல்லருள் வழங்கும் விநாயகனை
இருகரம் கூப்பி இறைஞ்சுகின்றோம்.

(37072)(29-14-16) - யாழ்.இந்து மகளிர் கல்லூரி சமூகம்.



UNIVERSITY OF JAFFNA SRILANKA

VACANCY

POST OF TECHNICAL OFFICER GER ILSEG.'A'

With reference to the advertisement dated on 24.08.2004 the closing date to receive the applica tions has been extended upto 15.10.2004.

Registrar,
University of Jaffna.
Sri Lanka.
29.09.2004

(சி-37939)(29-14-16)


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்



மண்ணில் 16 – 12 – 1910

விண்ணில் 01 – 09 – 2004

### திருமதி அன்னம்மா இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

01.09.2004 அன்று இறைபதமடைந்த எமது பாசமிகு இல்லத் தலைவி திருமதி அன்னம்மா இராமலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (01.10.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. இந்நிகழ்விலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

190 ஆம் மைற்கல்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(36929)(29-14-16)

மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


தரம் 5 புலமைப்பரிசில் -2005 பயிற்சிப் பரீட்சை (ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்)

தற்போது தரம் 4 இல் உள்ள மாணவர் களுக்கான பயிற்சிப் பரீட்சை வாராந்தம் எமது பரீட்சை மண்டபத்தில் நடைபெறும். வெளிமாணவர்களும் கலந்துகொள்ளலாம்.

★ சுந்தர் வெளியீடு
★ நாவலர் வெளியீடு

முதலாவது பரீட்சை -03.10.2004 ஞாயிறு பரீட்சை 3 நேரங்களில்
(காலை 9.00/11.00/பிற்பகல் 2.00)

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி (37080) யாழ்நகர்.



O/L PAPER CLASS

★ கணிதம்
★ சமூகக்கல்வி
★ விஞ்ஞானம்
★ வர்த்தகம்

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற வும்.

தரம் 1 முதல் A/L வரை. (37081)

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.



நெல்லை சில்க்

நெல்லியடி நெல்லை சில்க் மாதாந்த பட்டுச்சேலைக்கான இந்தமாத அதிர்ஷ்டலாபச் சீட்டு இல. 1586 உரியவர் நேரில்வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

சி.அகிலதாஸ்
உரிமையாளர். (சி-37943)



வேலையாள்கள் தேவை

★ உணவு பரிமாறுபவர்
★ சமையல் உதவியாளர்
★ ரொட்டி மேக்கர்

உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

திறீ ஸ்ரார் ஹோட்டல்
இல.362, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 7591 (37944)



ராஜா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு அர்ஜுன, லாராதத். ரகுவரன். விவேக் நடித்த அரசாட்சி



ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
பு.நே. 10.30,2.30,6.30, 9.30 (36364)



நாகம்ஸ் சுன்னாகம்

விஜய்.சோனியா அகர்வால். வடிவேல் நடிப்பில்

மதுர

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே) (C-37740)





நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று மட்டும் கள்ளரன் (ரீல்ல்)
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (புதியநேரம்)

நாளைமுதல் சாய்சிங், தனுஷ் நடித்த
திருடா திருடி





சித்தி சினிமா பண்டத்தரிப்பு



விஜய்காந்த், பிரபுதேவா, நமிதா வடிவேல் நடித்த
(ரீலீஸ்)
தினசரி: 3.00, 7.00மணி (சி-37902)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## பூதப்பிள்ளை நல்லம்மா (லிற்றில்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிட மாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூதப்பிள்ளை நல்லம்மா அவர்கள் 26.09.2004 ஞாயிற்றுக்கிழமை கனடா வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முதலித் தம்பி (அப்பர்) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் தற் போது கனடாவில் வசித்துவரும் பூதப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற P.W.D.Inspector) பாசமிகு மனைவியும் ஜெயானந்தன், சுதாநந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுமித்திரா, டிலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஸ், சஞ்ஜே, ஹரிஸ், விதுஜா, இந்துஜா, அஜந் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற தங்கரத் தினம் மற்றும் இராஜேந்திரம், பரமேஸ்வரி, இராஜசிங்கம், இராசம்மா, சிவபாக்கியம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காசிநாதர், பொன்ராசா, காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், அருந்த வரத்தினம், சிவகுமார் மற்றும் மகாலட்சுமி, மதிவதனி, ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சீவரத்தினம், கனகமலர், சந்திரசே கரம், தங்கரத்தினம் தம்பதிகளின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2004) சனிக்கிழமை கனடாவில் நடைபெறவிருக்கிறது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

V.பாலசுப்பிரமணியம்
"கோகுலம்"
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(37082)(29-14-16)

தகவல்:
இராஜேந்திரன்
(சகோதரன்).

## திருமதி குணரத்தினம் சத்தியலட்சுமி

(மணியக்கா)



மில் லேன், மல்லாகத்தைப் பிறப்பிடமாக வும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி குண ரத்தினம் சத்தியலட்சுமி (மணியக்கா) அவர் கள் 29.09.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் (குஞ் சர்) அவர்களின் அன்பு மனைவியும் திலகேஸ் வரி (லண்டன்), உமாலோகராணி (கனடா), காலஞ்சென்ற முருகமூர்த்தி மற்றும் ஜெக தீஸ்வரி (கனடா), செல்வமுருகன் (கனடா) ஆகி யோரின் அன்புத் தாயாரும் திருமதி குணரத்தினம் செல்வராணியின் அன்புச் சகோதரியும் விஜயகௌரியின் பெரியதாயாரும் சிறிஸ்கந்த ராஜா (லண்டன்), அருணகிரிநாதன் (கனடா), சிறீஸ்காந்தன் (கனடா), ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேக்கா, சிந்துயா, கௌசல்யா, அருண்ராஜ், வினோராஜ், சுரேஸ்ராஜ், சாதனா, கர்சனா, கீர்த்தனா, சோபிகா, தர்ஷன், தனுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2004) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் லேன்,
மல்லாகம்.

(37079)(29-14-16)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்றில் நேற்று ஹர்த்தால் தமிழர் கடைகள் மீது காடையர் தாக்கு

## இனமோதலுக்கு வித்திடும் முயற்சி எனப்புலிகள் குற்றச்சாட்டு

அக்கரைப்பற்று,ஒக்.1

அம்பாறை மாவட்டத்திலுள்ள வட்ட மடு விவசாயப் பிரதேசத்தில் விவசாயம் மேற்கொள்ளச் செல்லும் முஸ்லிம் விவசாயிகள் மீதான துன்புறுத்தல்களுக்கும் விவசாயிகளின் டிராக்டர்கள் கடத்தப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அககரைப்பற்றுப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அதேசமயம், அப்பகுதியில் இருந்த தமிழர்களின் கடைகள் மீது காடையர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதனால் அங்கு நேற்றுப் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்றைய ஹர்த்தால் காரணமாக வங்கிகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள், கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. போக்கு வரத்துக்களும் தடைப்பட்டிருந்தன.

தமிழர்களின் கடைகள் தாக்கப்பட்டதை அடுத்து தமிழ் மற்றும் முஸ்லிம் பகுதியினர் இருவருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படாதவாறு இரு தரப்புப் பிரமுகர்களும் விடுதலைப் புலிகளும் பொலீஸாரும் நடவடிக்கை எடுத்தனர். விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதேவேளை -காடையர்கள் சிலர் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளை அடித்து நொறுக்கும்போது பொலீஸார் பார்த்துக்கொண்டு வாழாவிருந்தனர். - என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்தும் நோககிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். எம்மைப் பிரித்து வன்முறைகளைத் தூண்டும் சக்திகளுக்குத் துணைபோகக் கூடாது எனறும் நாம் இரு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

# சமாதான முயற்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதார்த்த உண்மையுமாகும்" - என்றார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் பீரிஸ் இப்படிக் கூறினார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி இரட்டை வேடம் போடுகின்றார். சர்வதேச சமூகத்திற்கு சமாதானப் பேச்சில் ஆர்வம் கொண்டவர் போல் தன்னைக் காட்டிக்கொள்கின்றார்.

இங்கே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்டவும், சட்டவிரோதமான முறையில் அரசமைப்பை மாற்றி தொடர்ந்தும தானே அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்ற குறிக்கோளுடனும் வேறு போக்கில் செயற்படுகின்றார்.

இந்த விடயங்களைச் சமாளிப்பதற்கு ஜே.வி.பியினரின் ஆதரவு ஜனாதிபதிக்குத் தேவைப்படுகின்றது. ஆனால், அவர்களோ இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அடம்பிடிக்கின்றனர். அரசின் பங்காளிகளான ஜே.வி.பியினரின் நச்சரிப்பைச் சமாளிக்கவே தேசிய ஆலோசனைச்சபை என்று 'பம்மாத்து' காட்டுகின்றார் ஜனாதிபதி.

பேச்சுக்களையே ஆரம்பிக்க முடியாத நிலையில் திக்குமுக்காடும் ஜனாதிபதிக்கு தேசிய ஆலோசனைச்சபை ஒரு கேடா? - என்றும் வினாவினார் பேராசிரியர் பீரிஸ்.

"டோக்கியோ மாநாட்டில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் - அரசும் - புலிகளும் முன்வைத்துள்ள இடைககால நிர்வாக சபை ஆலோசனைகளின் அடிப்படையில் -

விட்ட இடத்தில் இருந்து பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதியும் விருப்பம் தெரிவித்துள்ளார். உள்நாட்டிலும், உலகத் தலைவர்கள் மத்தியிலும் இதனை அவர் வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

இலங்கைச் சரித்திரத்திலேயே முன் எப்போதும் இல்லாத வகையில் பிரதான எதிர்க்கட்சியான நாங்களும் ஜனாதிபதியின் இம் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குகிறோம் என உறுதி அளித்துள்ளோம். இப்படியான ஆதரவுடட்லிக்கும், ஜெயவர்த்தனாவுக்கும் கூட எதிர்க்கட்சிகளிடமிருந்து கிடைக் கவில்லை.

நாட்டின் தேசிய நலன் கருதியே நாம் அரசுக்கு எமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளோம். எனவே, ஏற்கனவே விட்ட இடத்தில் இருந்து ஜனாதிபதி சமாதானப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்பதுதான் ஐ.தே.கவின் கோரிக்கை. ஆனால், உண்மையாகவே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற உள்நோக்கம் ஜனாதிபதிக்கு இல்லை. அவருடைய பதவிக காலம் இன்னும் 13 மாதங்கள் மட்டுமே. இதனை நீடிக்கவேண்டும், தொடர்ந்து தன் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்று அவர் நப்பாசைப் படுகின்றார்.

அதற்கு ஒரு யுக்தியாகத்தான் தேசிய ஆலோசனைச்சபை எனப் பூச்சாண்டி காட்டுகின்றார் அவர்.

இந்த ஆலோசனைச் சபைக்குள் அரசியல், சமயம், சிவில் சமூகம் என மூன்று உப பிரிவுகளில் குழுக்களை அமைக்கப்போகின்றாராம் ஜனாதிபதி.

இந்த மூன்று உபகுழுக்களும் மாதம் ஒரு முறைதான் கூடும் என்கிறார்.

உபகுழுக்களின் ஆலோசனைகள் தேசிய ஆலோசனைச் சபையில் பரிசீலிக்கப்படுமாம். ஆனால், இந்த ஆலோசனைச் சபை எபபோது கூடும் என்பதுதான் கேள்விக்குறி.

அப்படியானால், ஜனாதிபதி தனது எஞ்சியுள்ள 13 மாதப் பதவிக் காலத்திற்குள் எத்தனை தடவை இந்தச் சபையைக் கூட்டப்போகிறார்? அதன்பின் எப்போது சமாதானப் பேச்சை ஆரம்பிக்கப்போகின்றார்? அதுதான் எங்களுடைய கேள்வி. எனவே, இவையனைத்தும் இப்போது ஜனா திபதியால் மேடை ஏற்றப்படும் ஒரு போலி நாடக மேயன்றி வேறில்லை. என்றும் பேராசியர் பீரிஸ் கூறினார்.

ஜனாதிபதியின் அதிகாரம் ஆறு வருடங்களுக்கும் மட்டுமே. அதனை எவரும் ஏழு வருடங்களாக அதிகரிக்கவில்லை. உலகத்தில் எங்குமே நடைபெறாத வகையில் இரகசியமான முறையில் பதவிப்பிரமாணம் செய்தேன் என்று ஜனாதிபதி காதில் பூ சுற்றிப் பார்க்கின்றார். இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை - என்றும் குறிப்பிட்டார் பீரிஸ். (எ-க)

# ஏ-9 வீதிப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரத்தை ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் இரவு 7 மணிவரை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் யாழ்ப்பாணத்தில வைத்து தெரிவித்திருந்தார்.

நோர்வே அனுசரணையாளரை கடந்த மாதம 16 ஆம் திகதி ஜனாதிபதி சந்தித்த சமயம் நேரத்தை நீடிக்கத் தமது அரசு முடிவுசெய்துள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார் என சந்திப்பின் பின்னர் வெளியான செய்திக்குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேர நீடிப்புத் தொடர்பாக அரசின் சமாதானச் செயலக அதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டதற்கு, நேர நீடிப்புத் தொடர்பாக அரசு எடுத்த முடிவுகுறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலமாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பு இன்னமும் கிடைக்கவில்லை என்று அவர் பதிலளித்தார்.

நேர நீடிப்பு தொடர்பாக இன்னமும் இணக்கம் ஏற்படவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ் அலுவலக அதிகாரியும் தெரிவித்தார்.

இந்த இரு தடைநிலைகளூடாகவும் இப்போதைக்கு வழமைபோல காலை 7 மணி முதல் மாலை 5.30 மணிவரையும் போக்குவரத்து இடம்பெறும் என்றும் அவர் கூறினார். (எ-3)

# யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவிருக்கின்றன. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் படி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ளது. (எ-3)

# யாழ். தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கவேண்டும்.

★ உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் வரலாறுப பிரசித்திபெற்ற ஆலயங்கள் ஆகியவற்றுக்கு மக்கள் சுதந்திரமாகச் சென்றுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

★ யாழ். நகர போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் முகமாக யாழ். மின்சார நிலைய வீதியை மக்கள் பாவனைக்காகத் திறந்துவிட வேண்டும்.

★ ஏ-9 வீதியை காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை மக்களின் பாவனைக்காகத் திறந்துவிடுதல் வேண்டும்.

- இவை போன்ற கோரிக்கைகளே மக்கள் குழுப் பிரநிதிகளால் படைத் தளபதியிடம் முன்வைக்கப்பட்டன.

இக்கோரிக்கைகளைச் செவிமடுத்த யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், அங்கு கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது:-

உங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எல்லாவற்றுக்கும் என்னால் தீர்வு காணமுடியாது. இது உயர் மட்டத்துடன் தொடர்புபட்டுள்ளதால் அவர்களுடன் பேசிய பின்பே இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

ஏ-9 வீதியை மேற்குறிப்பிட்ட நேர அட்டவணைப்படி திறப்பதற்கு எமக்கும் பூரண சம்மதம். இதுதொடர்பாக அண்மையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருடன் கலந்துரையாடியபோது அவர்களும் அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். அந்தவகையில், இது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகின்றேன்.

அதேபோல, யாழ். மின்சார நிலைய வீதியை மக்கள் பாவனைக்கென முழுமையாக வழங்க முடியாது. இருந்தாலும் அப்பாதை ஊடாக வைத்தியசாலையின் பொருள்களைக் கொண்டுசெல்வதற்கும் பிரேதங்களைக் கொண்டு செல்வதற்கும் அனுமதிக்கப்படும்.

குடாநாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் ஏற்படுத்த அனைத்துத் தரப்பினரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் தொடர்புகொள்ளவுள்ளேன் - என்றார் தளபதி.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுத்தலைவர் டி.ஆர்.அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, வண. பிதா சி.வி.ஜெயக்குமார், வண. பிதா ஜே.பி.ஈ.செல்வராஜா அடிகளார், சு.பரமநாதன், டாக்டர் வி.தியாகராஜா, கே.பாலசுப்பிரமணியம், கே.பூரணச்சந்திரன், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோரும் -

படைத்தரப்பில் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், 51 ஆவது படைப்பிரிவுத் தளபதி மேஜர் ஜெனரல் யு.பி.எல்.பெர்னாண்டோ, பிரிகேடியர் ஜே.பி. ரணவீர, லெப்டினன் கேணல் ஈ.டபிள்யூ.டி. சில்வா, யாழ்.நகரக் கட்டளைத் தளபதி மேஜர் பி.எஸ்.ஆர்.உதயதீர, சிவில் அதிகாரி மேஜர் அஸ்வத்த, யாழ்.மாவட்டப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் தயா செனிவிரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-5)

# காமினி பொன்சேகா நேற்றுக் காலமானார்



வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், புகழ்பெற்ற சிங்கள நடிகருமான காமினி பொன்சேகா நேற்று மாலை ஜா-எலவில காலமானார்.

ஐ.தே.கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக அரசியலுக்குள் பிரவேசித்த பொன்சேகா பிரதி சபாநாயகராகவும் கடமையாற்றியுள்ளார்.

சிங்களத் திரைப் படங்கள் மூலம் தன் நடிப்புத் திறனை வெளிப்படுத்திய காமினி பொன் சேகா சிறந்த கலைத்துவம் மிக்க கலைஞராக விளங்கினார். திரை நடிப்புடன் இயக்குநராகவும் தயாரிப்பாளராகவும் இவர் விளங் கினார்.

பிற்காலத்தில் தமிழ்-சிங்கள அரசியல பிரச்சினையை வைத்து 'கொட்டி வலிகய' என்ற திரைப்படத்தை இவர் இயககினார். இனவாதமற்ற ஒரு கலைஞனாக விளங்கிய இவர் இலங்கை-இந்திய கூட்டுத் தயாரிப்பான நங்கூரம், நீலக்கடலின் ஓரத்திலே ஆகிய தமிழ்ப் படங்களில் கூட நடித் திருக்கின்றார். (எ)

# ஆளுநர் விருது பெறுவோர் விவரம் வெளியானது!

திருகோணமலை, ஒக்.1

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெறுபவர்களின் பெயர் விவரங்கள் நேற்று மாலை திருகோணமலையில் வெளியாகின.

முதற்கொண்டு கிடைத்த முடிவுகளின் படி கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் உட்பட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூவருக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

# கோதுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து கோதுமை மாவை விநியோகிக்கும் பார ஊர்திகளின் கட்டணங்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பைச் சமாளிப்பதற்கே இந்த விலையுயர்வை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அமைதிப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத் தயார் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். பேச்சுக்களில் அரசின் யோசனை குறித்தும் கலந்துரையாடத் தயாராக இருக்கின்றோம் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

பேச்சுக்கள் முன்னெடுக்கப்படாமைக்கு முழுப் பொறுப்பும் அரசுப் பக்கமே உள்ளது. பேச்சை முன்னெடுப்பதில் அரசுக்கு அக்கறையில்லை. - என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

# சூட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் நேற்று அதிகாலை அவரது சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் அவரது வீட்டின் அருகே கிடக்கக் காணப்பட்டது.

நீர்கொழும்பிலுள்ள நகைக் கடையொன்றில் தொழில்புரியும் இவர், நேற்றுமுன்தினமே வீட்டுக்கு வந்துள்ளார்.

கொல்லப்பட்ட இளைஞருக்கு இராணுவத்தினருடன் தொடர்புகள் இருந்தன என்று ஒரு தகவல் தெரிவித்தது. இளைஞனின் பின்னணி குறித்துத் தாங்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றோம் என்று ஹராவூர்ப் பொலீஸார் தெரிவித்தனர். (எ-5)


வாழும் கலை
இன்று ஆரம்பம்
யோகாசனப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன

ஆசனம், பிரணாயாமம், கிரியா - முத்ரா, தியானம் ஆகிய பயிற்சிகள் அனைத்தும் அளிக்கப்படும்.

- மூன்று மாத காலத்தில் முழுமையான பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- உங்கள் பெயர்களை இன்று (01.10.2004) வெள்ளிக்கிழமை பதிவு செய்துகொள்ளவும்.

ஆசிரியர்
ம.நேசராஜ் (கண்ணன்)
Natiyakalaimany
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இந்தியா)
Diploma in Yoga therapy
Diploma in Yoga
D.H.I. Home,
M.I.B.R.

பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடம்.
UNI VENTURES,
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
55, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 0777 918280
021-2227666

நீங்களும் வாழும்கலை பயிற்சிபெற்று உங்கள் வாழ்க்கையை ஓர் அற்புத கலையாக மாற்றலாமே! வாருங்கள் வந்து பயனடையுங்கள்.
(36920)(35-11-15)



A/L DAY CLASS
விஞ்ஞானமுறை
LOGIC II
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம்:02.10.2004 சனி
காலை.10 மணி
BEACON
யாழ்.நகர்
(36996)



D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
A/L DAY CLASS பிரிவு II
பொருளியல்: வரதராஜன்
கணக்கீடு: பாலவாசன்
வணிகக்கல்வி: உமாகாந்த்
ஆரம்பம்: 04.10.2004 திங்கள் 8.00 மு.ப.
(37043)



வர்த்தகமும் கணக்கியலும்
O/L PAPER CLASS
By.K.B.Kajan
Sat., Sun. - 2.00 - 3.15 p.m.
நாவலர்
ஆனைப்பந்தி,
யாழ்நகர்.
(37043)



BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்
கணக்கீடு
கம்பனி
முன்னுரிமைப் பங்கு மீட்பு
A/L 2005 Sat., Sun. 6.00 - 7.00 a.m.
A/L 2006 தொங்கல் கணக்கு Sat., Sun. 7.00 - 8.00 a.m.
By: K.S.மோதிலால் (B.B.A.)
(37064)



BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2005
இரசாயனம்
PAPER CLASS
ஆசிரியர்
திரு.N.மகேஸ்வரன்
B.Sc. (Hons)
ஆரம்பம்
02.10.2004
சனி 6.00 p.m.
(37015)



NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்
SAT, SUN PHYSICS
2005: ஓட்ட மின்னியல் (11.00a.m.) By:ஜெயசீலன்; சடத்தின் இயல்புகள் (1.00p.m.) By: பிரபா
2006: ஒளியியல் (10.00 a.m.) By: ஜெயசீலன்; அலைகளும் அதிர்வுகளும் (12.00) By: பிரபா
(36997)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org